ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஞு மாசி-மீ 1-உ (12—2—1933) | மலர் 42.

## லெனினும், மதமும்.

இது ரஷிய தேசத்தின் மதப்பித்தையும், பாதிரிகள் புரட்டையும் ஒழித்து, கொடுங்கோலரச குடும்பத்தை வேறுடன் வீழ்த்தி ஏழை பணக்காரத்தன்மையை அழித்து, தோட்டி முதல் தொண்டமான் வரை எல்லோருடைய வாழ்க்கையையும் ஒரே மாதிரியாக்கி தொழிலாளிகளால் தேசம் முழுவதும் ஆட்சி புரியும்படி செய்த ஒப்பற்ற பொது உடமைக்கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இதை வாங்கிப் படிப்பவர்களுக்கு மதத்தைப்பற்றி சுயமரியாதை இயக்கத்தாரின் கொள்கை என்ன என்பதும், அவர்கள் ஏன் தங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதில்லை என்பதும், பின்னை ஏன் அவர்கள் நாஸ்திகப்பிரசாரம்செய்பவர்களாகக்காணப்படுகிறார்கள் என்பதும், சுயமரியாதை இயக்கக்காரர்கள் காங்கிரசையும், காந்தீயத்தையும், தேசியத்தையும் ஏன் குற்றம் சொல்லுகிறார்கள் என்பதும், காந்தியின் குருவென்னும் டால்ஸ்ட்டாயை ரஷியர்கள் ஏன் வெறுத்தார்கள் என்பதும் நன்றாய் விளங்கும். மற்றும் தொழிலாளிகளும் சரீரத்தினால் பாடுபட்டு உழைக்கும் மக்களும், பாடுபட்டு அப்பாட்டின் பயன்பெறாமல் கஷ்டப்படக் காரணம் என்ன என்பதும், அவர்கள் விடுதலையடைய மார்க்கம் என்ன என்பதும் நன்றாய் விளங்கும். ஆகவே இப்புத்தகத்தை ஒவ்வொரு தொழிலாளியும், ஒவ்வொரு சுயமரியாதைக்காரரும் அவசியம் படிக்கவேண்டியதாகும்.

சுமார் 100 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கும், சுயமரியாதை சங்க அங்கத்தினர்களுக்கும் விலை அணா 0—3—0

விலையுடன் ஒரு அணா ஸ்டாம்பு சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு புக்போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# இந்தியாவின் குறைபாடுகள்.

## The Crux of the Indian Problem

என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.

இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சீர்கேடு, மதம், மதபுத்தகங்களும் அவற்றிலுள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மரணம், ஒழுக்கம், சோதிடமும் சகுனமும், முதலியனபற்றிய ஆராய்ச்சியும், கண்டனங்களும்நிறைந்த கட்டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற மணிவாசகங்கள், இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவதவசியம். முகவுரை, முடிவுரையுடன் 160 பக்கங்களுக்கு மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இதன் விலை அணு ... ... ... | 0—8—0 |
| குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு ... | 0—6—0 |

மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## "கடவுளும், பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதிக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா"; "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள்; குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணு 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணு தபால்தலைகள் அனுப்பவேண்டும்

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது.

### கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம்உண்டாகும்மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரு. 2.

அன்னிய நாட்டார் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

மிலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி S. I.

## ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அரிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது.

பிரதி ஒன்றுக்கு விலை அணு. 0—6—0

நாஸ்திகன்

C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சிபுரம்.

## "SUPERSTITION OF KHADI"

A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.

Price annas. 0 2.0

# பாதிரிகளும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(செனிக்யூ பாதிரியார் எழுதியது)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

பெண்களுக்கு அவர்களது அந்தரங்கமான விஷயங்களை வெளியிடும்படியான சந்தர்ப்பம் வரும் போது அவர்களுடைய தேகங்கள் நடுங்குகின்றன, மயிர் சிலிர்க்கின்றன, வியர்வை ததும்பி யெழுகின்றன! அவர்களது உள்ளத்திலே நாணமும், சுயமரியாதையும் மேலோங்கி, பொய்யான மத சம்பிரதாயக்கொள்கைகளைத் தலை யெடுக்காதபடி அழிக்க முற்படுவதை நன்கு அறியலாம். அநேக சந்தர்ப்பங்களில் அவர்கள் ஒன்றும் வாய்விட்டுக் கூற முடியாமற்போவதால், பாவமன்னிப்பு பெற முடியாமல்--பாவ மூட்டையோடு சோக பாரத்தையும் தாங்கியவாறு, ஏங்கி வெளியேறுகின்றனர்.

என்னே ரோமச் சபையின் கொடுமை!—என்னே மனித வாழ்வின் வெம்மை!!—அந்தோ!!! மாய்கையில் மாளும் மனிதர்களின் ஹிருதயத்தில் சிலுவையின் தத்துவம் எத்தகைய ரோகத்தை யூட்டுவதாக இருக்கின்றது பாருங்கள்! பிராமணப்பெண்கள் உடன்கட்டை யேறுவது என்பது இதைவிட எளிதானதன்றோ!!

பாவ மன்னிப்புப் பெறவரும் பெண்கள்—கொஞ்ச நேரமோ அல்லது நீண்டநேரமோ—மிக்க பரிதாபகரமான மனோ துன்பத்தில் வீழ்ந்து தவிக்கிறார்கள் என்பதை மறுத்துக்கூற எந்தக் கத்தோலிக்க பாதிரியாவது முன்வருவாரா? என்று அவர்களை யான் அறைகூவி அழைக்கின்றேன். தைரியமிருந்தால் முன்வரட்டும்!

உலக ஆசாபாசங்களிலிருந்துமீட்சிபெறவே கடவுள் பெண்களுக்கு கவசம் போன்ற சுயமரியாதையுணர்ச்சியை ஹிருதயத்திலும், அறிவிலும், ஆத்மாவிலும் புகுத்தியிருக்கின்றார்கள். அவ்வித சுயமரியாதை யுணர்ச்சியின் பயனாக அவர்கள் ஆண்களிடம் தாழ்ந்த விஷயங்களைக் கூற முடியாமற் போவதனாலும், பாதிரிகள் கேட்கும் ஆபாசக் கேள்விகளுக்கு விடையளிக்க முடியாமற் போவதனாலும்—அவர்கள் அதைக்கடவுள் தங்களுக்கு அளித்த கவசம் என்பதாக உணர்ந்து பாவ சங்கிதனத்தின் போது பேசாமலே இருந்து விடுகின்றனர்.

பல தெய்வ வணக்கக்காரர்களாக இருக்கும் காட்டு பிராண்டிகளும், பிறரிடம் வெளியிடுதல் ஆபாசமெனக் கருதும் விஷயங்களைப்பெண்கள் பகிரங்கமாகஆண்களிடம் பேசவைப்பதற்காக இந்தப் பாதிரிகள் கூட்டம் மதத்தின் பெயரால் அநேக வருஷமாக சூழ்ச்சி செய்து வந்திருக்கிறது. அநேகர் இவற்றையுணர்ந்து பாவ சங்கீர்த்தனம் பெறாமலே இருந்து விடுகின்றனர், சிலர் தம்போன்ற பாவிகளின் வார்த்தைகளைக் கேட்டு, கேட்டுப்பாவமயமாகவே இருக்கும் பாதிரிகளிடம் மன்னிப்புப் பெறுவதைவிடக் கடவுளிடமே கேட்டுக்கொள்ளலாமென்று, பாதிரிகளின் முன் சங்கடப்படாமலிருந்தே இறக்கத்துணிந்து விடுகின்றார்கள். ரோமாபுரியிலுள்ள கத்தோலிக்க பாதிரிகளனைவரும், இத்தகைய இயற்கை மனப்பான்மை பெண் மக்களிடம் குடிகொண்டிருப்பதை நன்குணர்வார்கள். கிறிஸ்து மத, வேத சாஸ்திரி (Theologian) ஒவ்வொருவனும் இதையுணர்ந்து, அதனை அகற்றுவதற்காகத் தங்களிடம் வரும் ஒவ்வொரு பெண்ணிடமும் இதனை முற்படவே கூறி, அவ்வாறு பகிரங்கப்படுத்தாமல் ஒளி மறைவாக வைத்திருத்தல் ஏசுவின் ஏழாவது கட்டளைக்கு விரோதமானதென்று கற்பிக்கின்றனர். உண்மையில்வேத சாஸ்திரிகளும், பாதிரிகளும், திருச்சபைச் சட்டப்படி, இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் பாப சங்கீதனப் பெட்டியினருகில் ஏற்படாமல் முன் ஜாக்கிரதையாக இருக்கும்படி கட்டளை இடப்பட்டிருக்கிறார்கள்.

ரோமன் கத்தோலிக் பாதிரி எவரும் நான் கூறும் இந்த அபிப்பிராயங்களுக்கு மாறுபாடாகக் கூற முன்வர முடியாதென்பேன். ஏனெனில் எவராவது முன் வருவாராகில் அவர் நான் காட்டும் மறுக்கமுடியாத ஆதாரங்கள் (Testimonies) பலவற்றிற்கும் பதில் சொல்ல ஒருக்காலும் முடியவே முடியாது என்பது உறுதி.

கடவுள் எனக்கு ஆயுளைக் கொடுப்பாராகில், நான் இந்த பிரச்சினை சம்பந்தமாக ரோமன் கத்தோலிக்க பாதிரிகளும் மதவாதிகளும் கொடுத்துள்ள அபிப்பிராயங்களை ஒருங்கு திரட்டி ஒரு நூலாக்கி உலக மக்களுக்குப்பகிரங்கப் படுத்துவேனென்பது திண்ணம். அவ்வித புஸ்தகம் இது வரை வெளிவராத புது மாதிரியிலே அமைக்கப்படுமென்பதில் ஐயமில்லை. இயற்கையாக ஒவ்வொரு ரோமன் கத்தோலிக்க மாதும், ஏன் சகல பெண்களும், கடவுள் கொடுத்துள்ள சுயமரியாதை நல்லுணர்ச்சியின் பயனால் பாவசங்கீர்த்தனப் பெட்டியென்பதாக மோசக்காரர்கள் அமைத்துள்ள கண்ணியில் வீழாது எவ்வாறு காப்பாற்றப்படுகின்றார்கள் என்பதும், பாவ சங்கீர்த்தனப் பெட்டியினருகிலிருந்து பேசும்போது அவர்கள் எவ்வாறு மனித உணர்ச்சியற்று மிருகம் போலிருக்கத் தூண்டப்படுகின்றார்களென்பதும், மக்களுடைய ஆத்மா எவ்வாறு தீய வழியிற் சென்று போப்பு என்பவரின் திட்டங்களால் பாழ் படுகின்றதென்பதும், ஆகிய விஷயங்களை அந்த நூல், நன்றாக விளக்கும் என்பதில் தடையில்லை. தெய்வ சன்னிதானத்தில் எவ்வாறு சில காரியங்களைச் செய்யக் கூடாதெனக் கருதப் படுகின்றதோ, அம்மாதிரியே அவர் சன்னிதானத்தில் சொல்லத் தகாத வார்த்தைகளும் சிலஇருக்கின்றதென்பதாக பெண்கள் சுபாவமாக உணர்கின்றார்கள். மனதினால் செய்த பாவங்களைச் செயலினால் செய்தால் எவ்வாறு தகாதெனக் கொள்ளப் படுகின்றதோ, அவ்வாறே வாய்விட்டுச் சொல்வதும் அபராதமாகவே கருதப்படுகின்றது. அவ்வாறு அவர்கள் துணிந்து வெளியிட முன் வரும் போது, அவர்களுடைய ஹிருதயத்திலே சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கும் கடவுள், கீழ் குறிக்கப்பட்டுள்ள விஷயங்களைப் போன்ற சொற்களை அவர்கள் செவிகளில் அந்தரங்கமாகக் கேட்கும்படி செய்கின்றார்கள், அதாவது:—

"என்னுடைய சன்னிதானத்திலே! நீ ஒரு தடவை செய்த பாவம் போதாதா? அதை மறுபடியும் வேறொரு மனிதனிடமும் கூறி உன்னுடைய நிலையை, நீயே, என் மகிமையையும் பாழ்படுத்த முற்படுகின்றாய்? இந்த அசிங்கச் செயல்களை நீ எப்பொழுது மற்றொருவனிடம் கூறுகின்றாயோ, அப்பொழுதே அவனும் அந்தப்பாவத்தைச் செய்பவர்களின் கூட்டாளிகளில் (Accomplice) ஒருவனாகி விடுகின்றானன்றோ? அவனும் உன்னைப் போன்ற ஒரு பலக் குறைவான மனிதனேயாவான். உன்னைவிட அந்த விதத்திலும் அவன் மேலானவனென்று சொல்வதற்கில்லை, உன்னை மோசம் செய்தது எதுவோ அதே அவனையும் மோசஞ் செய்யும், உன் பலத்தைச் சிதைத்தது அவனையும் சிதைக்கும்; உன்னை அழித்தது அவனையும் அழிக்கும்; உன்னைக் கீழ் இழுத்துக் கொண்டு வந்தது அவனையும் அவ்வாறே செய்யும்! என்னுடைய கண்கள் உன்னுடைய பாவ கிருத்தியங்களைப் பார்க்க நேரிட்டதென்றே போதாதா? இன்னும் நீ அவற்றை மற்றொருவனிடம் சொல்லி அவற்றை நான் என் காதுகள் கொண்டு கேட்கவும் செய்தல் வேண்டுமோ? என்னுடைய தூதனாகிய டேவிட், அதிபராக்கிரமம் பொருந்திய சிம்ஸன், மிக்க தயாள குணமுடைய பீட்டர்—இவர்களெல்லாம் பெண்களுடைய கவர்ச்சிக்கு ஆட்பட்டு உண்மை நிலை குலைந்தழிந்தனரென்பது மெய்யன்றோ?"

இவ்வாறு அவர்களுடைய மனசாட்சி கூறும் வார்த்தைகளையும், இயற்கையாக அவர்களுக்கமைந்துள்ள சுயமரியாதை உணர்ச்சியையும் உதாசீனம் செய்து, அப்பெண்மணிகள் தங்கள் இரகசியங்களை வெளியிட முடியாமலும் உள்ளே வைத்திருக்க முடியாமலும் இருதலைக் கொள்ளி எறும்பு போல் அங்கு படுந்துயரம் சொல்லத்தரமன்று.

நான் உணர்ந்த மட்டிலும், மேற்சொன்னவிதமாக அவர்கள் அந்தரங்கமாக அனுபவிக்கும் மிகக் கொடிய துக்கம் இக்காலத்திலாவது இல்லாமலிருக்கும் என்று துணிந்து கூற இடமில்லை. அவற்றை உள்ளபடி விபரமாக எளியநடையில் எழுதி வெளியிடும் பட்சத்தில் உலக மக்களனைவரும் கதறிக்கண்ணீர் விடுவார்களென்பதில் ஐயமில்லை.

பெண்களுக்குரிய இயற்கை சுபாவ குணத்தையும், சுயமரியாதையையும் அகற்றி, அவர்களை ஆண்களிடம் தாராளமாகச் சகல விஷயங்களையும் வெளியிடும்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# "சமதர்ம முரசு"

## "ஏழை" எனும் சொல் எடுபட்டு யாவரும் இன்பவாழ்வெய்துவதெப்படி?

முடிவு.

(தோழர். A. இரத்தினசபாபதி)

(13)

"விடுதலை" என்ற வார்த்தையால் எல்லா வகையான விடுதலைகளும் அடங்கும். அரசியல் விடுதலை, சமூக விடுதலை, பொருளாதார விடுதலை, மூடநம்பிக்கைகளினின்றும் விடுதலை, குருட்டுப் பழக்கவழக்கங்களினின்றும்விடுதலை, பெண்களின் அடிமை விடுதலை, முதலாளி அல்லது செல்வவந்தனிடமிருந்து தொழிலாளியின் விடுதலை, எந்த ஒரு எதேச்சாதிக்காரத்தின் அடிமையினின்றும் நீங்கி அடையும் சுதந்தர விடுதலை...... இப்படியே பற்பலவான விடுதலைகளுந்தான் மனிதனின் இன்ப சுக வாழ்விற்கு இன்றியமையாதனவாயிருக்கின்றன.

"நான் மட்டும் சுகப்படவேண்டும்; எனது குடும்பமட்டும் இன்பமடையவேண்டும்; எனது சுற்றத்தார்—எனது குலத்தார் மாத்திரம் நல்வாழ்வு வாழவேண்டும், எனது ஊரார் மட்டும்—எனது நாட்டினர் மட்டிலும், எனது தேசத்தார் மட்டிலும், நன்மையடைய வேண்டும்" என்பன போன்ற குறுகிய சுயநல புத்தியுடையோரைத் தவிர மற்றயாவரும் "உலகிலுள்ள எல்லா மக்களும், எல்லா வகைகளிலும் விடுதலையடைந்து சுயேச்சை பெற்றோராய் எல்லா வகையான இன்பங்களையும் பெற்று வாழவேண்டும்" என்றே விரும்புவர். அவ்வாறு விரும்பவே நேர்மையுடையவொவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

எனவே இம்முறையில் பார்க்குங்கால், தேசவிடுதலை பெற்று சுதந்திரமுடையோராய் வாழவேண்டுமாயின் அந்நாட்டையாட்கியாளும் அன்னிய ராட்சி ஒழிய வேண்டும்; அதுபோலவே சமூகங்கள் யாவும் ஐக்கிய பாவத்துடன் ஒன்று பட்டு பரஸ்பர நல்லெண்ணத்துடன் வாழவேண்டுமாயின், சமூகக்கட்டுப்பாடுகள், ஒரு சமூகத்தினரையும், பிறிதொரு சமூகத்தினரையும், பரஸ்பரம் அன்புடையவர்களாகச் செய்வதை தடைப்படுத்தும் சமூகப்புல்லுருவிகள் ஒழிந்தாக வேண்டும். ஒரு சமூகத்தை அடக்கி ஆளும் மற்றொரு சமூகம் ஒழிந்தாகவேண்டும். சமூகத்தடைகள் சமூக உயர்வு தாழ்வுகள், சமூகத்தின் கோத்திரகுலங்கள், சாதிகள் உபசாதிகள் ஆகியவையெல்லாம் அழிந்தேயாகவேண்டும். மூடநம்பிக்கைகளினின்றும் விடுதலை பெறவேண்டுமானால், அறிவு வளர்ச்சி பெறவேண்டும். அறிவு வளர்ச்சியின் முன், மூடநம்பிக்கைகள் நிற்க மாட்டாவென்பது ஒருதலை. ஆகவே இம்மூடநம்பிக்கைகள் ஒழியவேண்டுமாயின அறிஞர் கூறுவதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்; பகுத்தறிவுக்கு வேலை வைக்கவேண்டும்; அந்தக் காரியத்தையும் காரண காரியங்கள் கொண்டு பாகுபடுத்திப்பார்க்க வேண்டும்; அநுபவத்திற்கு ஒத்துவராதவற்றையும், அறிவுக்கெட்டாதவற்றையும் கண்மூடித்தனமாய் நம்பும் முட்டாள்தனமான வழக்கம் தொலையவேண்டும்; குருட்டுப் பழக்கவழக்கங்களின் விடுதலை வேண்டுமாயின்; பழக்கம், வழக்கம். ஐதிகம், வைதீகம் என்பவற்றையெல்லாம் பகுத்தறிவால் ஆராயவேண்டும்; அது எத்தனை நீண்டகால வழக்கமாயினும், இக்கால அனுபவத்திற்கு ஒத்துவராதென்று கண்டால் அந்த க்ஷணமே அதை உதறித்தள்ளவேண்டும்; பெண்டிரின் அடிமைத்தளை அகற்றப்படவேண்டுமாயின், அவர்களுக்குள் கல்வி பரவேண்டும். எல்லாக்காரியங்களும் ஆடவரால்தான் ஆகவேண்டியிருக்கிறது; ஆடவர்களால்தான் எல்லாம் முடியும் என்ற எண்ணம் அடியோடொழியவேண்டும், "மனித சமூகத்தில் நாமும் சரிபாதி உரிமையும் சக்தியுமுடையவர்கள் என்ற உணர்ச்சி வேண்டும். "பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்" "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" "பெண்ணாய்ப்பிறத்தலே பெரும்பாவம்" "தெய்வந்தொழாள் கொழுநற்றொழுதெழுவாள்; பெய்யெனப் பெய்யும் மழை" "அடிவருடிப் பின் தூங்கி முன்னெழும் பேதை" என்ற இந்த அபத்தங்களையெல்லாம் அப்புறத்தள்ளவேண்டும். போதிய உண்மை அறிவைத்தரும் கல்வியைப் பெண்கள் கற்கவேண்டும்; சொத்துரிமை வேண்டும்; காதல் மணம், கலப்பு மணம், கைமைமணம், பெருகவேண்டும், கைமை எனும் சொல்லே கேட்கப்படாதொழிய வேண்டும்; இத்தகைய எல்லா அடிமைகளும், மனித சமூகத்தின் இக்காலத்திய இன்ப வாழ்க்கைக்கு முட்டுக்கட்டைகள் என்று கண்டால் இவற்றையெல்லாம் திரமாக உதறியெறியவேண்டும். பெரியோர் வாக்காயினுஞ்சரியே, ஐதிகமாயினும் சரியே சாத்திர சம்மதமாயினும் சரியே, கடவுள் கட்டளையாயினுஞ் சரியே, அவை எவையாயிருப்பினும் அதிர்த்துத்தகர்த்தெறியவேண்டும். ஏன்? இவைகள் மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகளாகக் குட்டிச்சுவர்போல் வழியடைத்து நிற்கின்றன.

இப்படியே பார்க்கும் பொழுது வயிற்றுக்கில்லாது மக்கள் படும் பாடும்; அதே சமயம் அம்மக்களைக் கசக்கிப்பிழிந்து பணக்கார முதலாளி கொழுக்கும் திமிரும் ஒழியவேண்டுமானால், இதற்கு முன் மற்ற விடுதலைகள் பெறுவதற்காக அடிமை நோய் களையக்கையாண்ட ஔஷதங்களையே இந்த இடத்திலும் கையாளவேண்டும்.

வயிற்றுக்கில்லாமல் கன்னங்கள் ஒட்டி, கண்கள் குழிவிழுந்து, முதுகு கூன் விழுந்து, தேகத்தில் இரத்தப் பசையற்று ஈன சுரத்துடன் தள்ளாடித்தள்ளாடி நடப்பவன் ஏழை.

காலையில் படுக்கைக் காப்பியும், அதற்கு மேல் சித்திரான்னமும், மற்றும் இரு வேளை பரமான்னமும், இடைவேளையில் காபி, சிற்றுண்டி, பானவகைகளும், இவற்றிற்கிடையில் பழவகைகளும், இவையெல்லாவற்றிற்கும் மேல் விதவிதமான லாகிரிகுடிவகைகளும், இவைகளின் அளவு மீறிய தீனியால் வயிறுப்பி, உருண்டு திரண்டு திமிர்கொண்டிருப்பவன் பெயர் பணக்காரன்.

வயிற்றுக்கில்லாத அந்த ஏழையின் குறுக்கு முறியவும், அவனது நெற்றி வியர்வை நிலத்தில் விழவும், அவன் இரத்தப் பாடுபடவும், இந்தப்பணக்காரன் அவனது கால்வயிற்றுக்கஞ்சிக்கேனும் வழிவிடாது அபரிமிதமான லாபத்தைக்கொள்ளை கொள்ளையாய்க் கொட்டிக் கொள்ளவும் காணப்படும் இந்த இடத்தில் முதலில்கூறிய அந்த ஏழை இங்கு தொழிலாளி. அங்கு இரண்டாவது கூறிய பணக்காரன் இங்கு முதலாளி.

அந்தப்பணக்கார முதலாளியின் வாழ்க்கை சுகமாகத்தானிருக்கிறது. மகிழ்ச்சிதான்! ஆனால் இந்த ஏழைத் தொழிலாளியின் வாழ்க்கையோ? எந்த நேரமும் கஷ்டம்! எந்த நேரமும் சஞ்சலம்! எந்த நேரமும் தரித்திரம்? எந்த நேரமும் நோய் கொடி! எந்த நேரமும் உயிராபத்து.

இந்த ஏழைகளின் கஷ்டத்தைக் காண கஷ்டமாயிருக்கிறது. கஷ்டமும் ஒழிந்து இவர்கள் சுகப்பட வேண்டுமானால், அவர்கள் பெற்றிருக்கும் ஏழை என்னும் பதமே உடைபடவேண்டும். இந்த அவசிய மேற்படுகையில் அந்த ஏழை என்னும் பதத்துடன் நேர் விரோதமான சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கும் பணக்காரன் என்ற பதமும் அம்பலத்திற்கு வருகிறது. எனவே தவிடுபொடியாகவேண்டியதாகிறது, இவை ஒரு புறம் நிற்க,

உலகில் மக்கள் ஜீவிப்பது உணவினால், அந்த உணவுப் பொருளைத் தேடியடைவதற்காக ஒவ்வொருவரும் தங்களாலியன்ற முறையில் பாடுபடுகின்றனர். இது நியாயம்!

ஆனால் ஒரு மனிதன் தன் சக்திக்கியன்ற மட்டும் பாடுபடத்தயாராயிருந்தும், அல்லது பாடுபட்டும் மனிதனின் உயிர் வாழ்வதற்கு வேண்டிய அளவு உணவுப் பொருள்களைப்பெற அவனால் முடிகிறதில்லையானால்............?

இதுதான் உலகெங்கும் தற்பொழுது கிளம்பும் பிரச்சினை! உலகெங்கும் பணநெருக்கடி அதிகமாயிருக்கிறதாம்; பொருளாதார மந்தம் ஏற்பட்டிருக்கிறதாம் தொழிலாளர்கள் லட்சக்கணக்காக வேலையில்லாது திண்டாடுகிறார்களாம்; அவர்களது மனைவி மக்கள் வயிற்றுக்கில்லாது வாடுகின்றனர், பிழைப்புக்கு வழியில்லை. வழிதெரியவுமில்லை.

இந்த விவரங்களை நாம் நம் நாட்டில் கண்ணால் பார்க்கிறோம். உலகிலுள்ள பிறநாடுகளிலும் இப்படியே இருப்பதாகப் பத்திரிகைகளில் படிக்கிறோம்.

உலகம் முழுவதும் இந்தப்படியாகவே—அதாவது—உலகிலுள்ள 200 கோடி மக்களும் இப்படியே வயிற்றுக்கில்லாது வாடுவார்களானால் அது வேறு விஷயம். அப்பொழுது அந்த 200 கோடி மக்களும் வேறு வழிகளைக்கையாண்டு இக்கஷ்டத்தைப் போக்கவேண்டும்.

ஆனால் இன்று நடப்பதென்ன? வேலையில்லாக்கஷ்டம், பணமுடை, எல்லாம் காணப்படுகிறது. இதற்கு முன் ஒரு வேளைக்கஞ்சிகுடித்த ஏழை மக்கள் சம்பளக்குறைவால் இப்பொழுது அதுவும் குடிக்கமுடியவில்லை. இதற்கு முன் கால் வயிற்றுக்கஞ்சி குடித்துத் தங்கள் குடிசைகளில் முடங்கிக்கிடந்த ஏழை மக்களுக்கு இப்பொழுது அதுவும் கெட்டு பெண் பிள்ளைகள் சகிதம் ஊரூராய்த் திரிய நேரிட்டிருக்கிறது—காரணம்? "பணமுடை" "வர்த்தகமந்தம்" என்று பதில் கிடைக்கிறது. ஆனால் அதே சமயத்தில் பணக்காரர்கள் என்போரும், முதலாளிகள் என்போரும் எப்படி வாழ்க்கை நடத்துகின்றனர்?

அவர்களது மெத்தைவீடு சரிந்துவிடவில்லை; அவர்களது மோட்டார் வாகனம் ஒழிந்துவிடவில்லை, அவர்களது மூன்று வேளைச் சோறும், முப்பது வேளைச்சிற்றுண்டியும் நின்றுவிடவில்லை; விதவிதமான குடிவகைகள் குறைந்துவிடவில்லை; விதவிதமான ஆடையணிகள் மாறிவிடவில்லை, உடல் தளதளப்பு வற்றிவிடவில்லை, அவர்கள் சினிமா, நாடகம், சர்க்கஸ் முதலியவற்றிற்கும், தாசிக்கும் தமாஷ்களுக்கும் செலவழிப்பது நின்றுவிடவில்லை! அவர்கள் வீட்டிலுள்ள சுகபோக அனுபோகங்கள் எல்லாம் முன்போல வேநடை பெற்று வருகிறது. ஒரு

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# இலங்கையில் புரட்சி பிரசாரம்.

## விஞ்ஞான ஞானமற்ற காந்தி!

சென்ற மாதம் 20ம்தேதி 5-30 மணியளவில் கொழும்பு (Y. M. B. A.) புத்த மத இளைஞர் சங்கக் கட்டிடத்தில் தோழர் Dr. Colvin R. de Silva, Ph. D. (London, Barrister-at-law அவர்களின் தலைமையின் கீழ் தோழர் Philip gunawardana, பிலிப் குணவர்த்தனா அவர்கள் "தனது 10 வருட ஐரோப்பா பிரயாணம்" என்ற தலைப்பின் கீழ் ஆங்கிலத்தில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கமாவது:---

அன்பிற்குறிய தோழர்காள்!

நான் படிப்பதற்காக ஐரோப்பா போயிருந்த காலையில் ஐரோப்பாவின் முக்கிய பாகங்களையும் சீன, ஜப்பான், துருக்கி, ருஷியா முதலியஇடங்களையும் கண்ணுற்று, கடைசியாகஅமெரிக்கா சென்று அவ்விடம் படிப்பில் சில வருடங்களைக் கழித்து விட்டுத் திரும்பி இருக்கிறேன். நான் பார்த்த இடங்களில் மத, தேசீய விஷயங்களில் ஜனங்களின் போக்கைக் கவனித்ததில் வேலையில்லாக் கஷ்டத்தின் நிமித்தமும், கல்வியின் அபிவிர்த்தியின் காரணமாகவும் மக்கள் மதத்தில் வெறுப்புக் கொண்டு தங்களின் சுதந்திரத்தை நிலை நாட்ட புரட்சி பேரிகையைக் கொட்டுகிறார்கள். இவர்களின் முற்போக்கான புரட்சியின் இடி முழக்கத்தால் மதங்கள் ஆட்டம் கொடுத்து விட்டன. இன்னம் சொற்ப காலத்தில் மதங்கள் அழிவுறும் என்பது நிச்சயம். அவ்வித புரட்சி இயக்கமே நமக்கும் அத்யாவசியம். விஞ்ஞானிகளும் (Scientists) புரட்சியாளர்கள் தான். அவர்கள் கண்டு பிடிக்கும் அபூர்வ காரியங்கள் அனைத்தும் மதங்களுக்கு முரண்படுகிறதினால் மதஸ்தர்கள் விஞ்ஞானத்தை எதிர்க்கிறார்கள். முன் கால விஞ்ஞானிகள் நூதனமான விஷயங்களைக் கண்டுணர்ந்து உலகிற்குதெரிவிக்க எத்தனித்ததின் காரணமாக அவர்களை மதப்பைத்தியம் கொண்டவர்கள் நாடு விட்டு விரட்டியும் சித்ரவதை செய்துமிருக்கிறார்கள். சினேகிதர்களே! நான் அமெரிக்காவில் இருந்த காலையில் விஞ்ஞானம் முதலிய கல்வி பயில வந்த ஆணும் பெண்ணுமாக 500 அல்லது 600 இந்திய தோழர்களைச் சந்தித்தேன். அவர்கள் படிப்பில் மகாசாமர்த்தியம் உடையவர்களாயிருக்கிறார்கள். தங்களின் படிப்பிற்கென்று ஒரு சதம் முதலாய் தங்கள் வீடுகளிலிருந்து வரவழைப்பது கிடையாது. அத்தோழர்களெல்லாம் இந்தியா திரும்பினால் தோழர். காந்தி தலைகுனிய வேண்டியது வரும். ஏனெனில் அவர்கள் எல்லாம் விஞ்ஞானஆராய்ச்சியுடையவர்கள். காந்தியின் கொள்கைகளுக்கு முரண் பட்டவர்கள். புரட்சியில் முழு நம்பிக்கையுடையவர்கள். எனப் பேசி முடித்தார். கூட்டத்திலிருந்த ஓர் காந்தி பக்தர் (தமிழர்) எழுந்து "மகாத்மா காந்தியை உலகமே மதிக்கிறதே, நீங்கள் இப்படி சொல்வதின் தாத்பரியம் யாது" என வினவினார். அதற்கு தோழர்குணவர்த்தனாஎழுந்து "காந்தி மத கிறுக்குடையவர், அவருக்கு விஞ்ஞானம் கிஞ்சிற்றும் கிடையாது, அவரைப்போன்றவர்கள்தான் அவரைவாழ்த்துகிறார்கள்" என கடினமாக பகர்ந்தார். இப்பதில் செவியுற்ற கூட்டத்தினர் நகைக்கவே கேள்விகேட்ட தோழர் வெட்கி உட்கார்ந்துவிட்டார். பிறகு தலைவர் பேசினதாவது:

அன்பான சினேகிதர்களே!

தோழர் குணவர்த்னா அவர்கள் தனது மேல்நாட்டுப் பிரயாணத்தின் அனுபவத்தை இனிய நடையில் எடுத்துரைத்தார். தோழர் உரைத்த அனைத்தும் பயனுள்ளவைகளே. நானும் என் படிப்பிற்காக மேல்நாடு சென்றிருந்தேன். அக்காலையில் அநேக பாகங்களைக்கண்டு களிப்புற்றேன். தோழர் குணவர்த்தனா எல்லா நாடுகளையும் பற்றி சொன்னார். ஆனால் மிக முக்கியமாகிய ருஷியா தேசத்தைப் பற்றி ஒன்றும் சொல்ல வில்லை. அப்பாகத்தை எனக்கு விட்டு விட்டார் போலும். இன்று புரட்சிக்கெல்லாம் முதன்மையான நாடு ருஷியாவாகும். அங்கு புரட்சி ஏற்படக் காரணமாயிருந்தவர் தீரன் லெனினாகும். ரஷியாவில் மதங்களுக்கு இருப்பிடம் கிடையாது. மதம் என்ற மணமே மறைந்து விட்டது. இரண்டாவது 5 வருடத்திட்டத்தில் கடவுள் என்றசொல்லும் நாட்டை விட்டு எடுபட வேண்டும் என திட்டம் செய்யப் பட்டாய் விட்டது. இது சாதிக்கக் கூடிய காரியமன்று என எண்ணலாகாது. அவசியம் ருஷியர்கள் கடவுள் என்ற சொல்லை தங்கள் நாட்டிலிருந்து விரட்டியே தீருவார்கள். ருஷியர்கள் அவ்வளவு பிடிவாத குணமுடையவர்களாய் விட்டார்கள். மேல் நாடுகளில் நான் சுற்றின காலத்தில் எங்கும் பட்டினியால் வாடி வதங்கி ஏங்கி பரிதபிக்கும் மக்களைக் கண்டேன். ஹா! இது மிகவும் கொடூரம். பணக்காரர்கள் எல்லாம் ஏழைகளைக் கண்டும் மனமிரங்கா கல்நெஞ்சுடையவர்களா யிருக்கிறார்கள். இது தான் கடவுளின் வல்லமை போலும். இத்துன்பம் தொலைந்தநாடு இன்று ருஷியாவே ஆகும் அவ்விடம் ஓர் வேலையற்றவன்கூட இல்லை. ருஷியர்கள் மிகவும் சந்தோஷத்தோடும், நேர்மையோடும் சீவிக்கிறார்கள். அவர்களைப் போன்று நீங்களும் ஆக வேண்டுமானால் விஞ்ஞானப்படிப்பு வேண்டும். உங்களின் கஷ்டத்தின் தன்மையை நன்குக நீங்கள் உணர வேண்டும். மார்க்ஸின் புத்தகங்களையும், ஜார்ஜ் பெர்னாட்ஷா எழுதியுள்ள நாடகரூபபுத்தகங்களையும் படியுங்கள். பெர்னாட்ஷா தற்பொழுது இவ்விடந்தான் இருக்கிறார். அவர் மகாஞானமுடையவர். அவரை சிலர் அல்ல, அனேகருக்கும் கசப்பாகப் பேசலாம். அதைப்பற்றி நமக்கு கவலை கிடையாது. அவர் ஓர் புரட்சிக்காரர், நாஸ்திக விஞ்ஞான அறிவாளி என பேசிமுடித்தார். கூட்டத்திற்குஏராளமாக வாலிபர்கள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத் தக்கது.

# சைவப்பற்று.

(பாரதிதாஸன்.)

(ஏற்ற ராகம் ஏற்றிப்பாடுக)

இரும்புப் பெட்டியிலே—இருக்கும்
எண்பது லக்ஷத்தையும்,
கரும்புத் தோட்டத்திலே-வருஷம்
காணும் கணக்கினையும்,
அருந் துணையாக-இருக்கும்
ஆயிரம் வேலியையும்,
பெரும் வருமானம்-கொடுக்கும்
பிற சொத்துக்களையும்,

ஆடை வகைகளையும்-பசும்பொன்
ஆபர ணங்களையும்,
மாடு கறந்தவுடன்-குடங்கள்
வந்து நிறைவதையும்,
நீடு களஞ்சியங்கள்-விளைந்த
நெல்லில் நிறைவதையும்,
வாடிக்கைக் காரர்தரும்-கொழுத்த
வட்டித் தொகையினையும்

எண்ணி எண்ணிமகிழ்ந்தே-ஒரு நாள்
எங்கள் மடாதிபதி
வெண்ணிறப் பட்டுடுத்துச்-சந்தனம்
மேனி யெலாம் பூசிக்
கண்கவர் பூஷணங்கள்-அணிந்து
கட்டில் அறைநோக்கிப்
பெண்கள் பலபேர்கள்-குலவிப்
பின்வர முன்நடந்தார்.

பட்டு மெத்தை-மணமே
பரவும் பூக்களின் மேல்
தட்டினிற் பக்ஷணங்கள்-அருந்திச்
சைவத்தை ஆரம்பித்தார்
கட்டிக் கரும்பினங்கள்-சகிதம்
கண்கள் உறங்கி விட்டார்
நட்ட நடுநிசியில்-கனவில்
நடந்தது கேளீர்

நித்திரைப் பூமியிலே-சிவனார்
நேரில் எழுந்தருளிப்
புத்தம் புதிதாகச்-சில சொல்
புகல ஆரம்பித்தார்
"இத்தனை நாளாகப்-புவியில்
"எனது சைவமதை
"நித்த நித்த முயன்றே-புவியில்
"நீளப் பரப்பிவிட்டாய்

"மடத்தின் ஆஸ்தியெல்லாம்-பொதுவில்
"மக்களுக் காக்கி விட்டேன்
"திடத்தில் மிக்கவனே-இனி நீ
"சிவபுரி வாழ்க்கை
"நடத்துக"! என்றே-சிவனார்
நவின்று பின் மறைந்தார்.
இடி முழக்கமென்றே தம்பிரான்
எண்ணம் கலங்கி விட்டார்.

தீப்பொறி பட்டதுபோல்-உடலம்
திடுக்கிட எழுந்தார்
"கூப்பிடு காவலரை"-எனவே
கூச்சல் கிளப்பிவிட்டார்
"காப்பளிக்க வேண்டும்-பொருள்கள்
களவு போகுமென்றார்
"மாப்பிளை என்றனுக்கே-இத்தகு
மரணம் ஏது"க்கென்றார்.

சொப்பனத்தை நினைத்தார்-தம்பிரான்
துள்ளி விழுந்தழுதார்
ஒப்பி உழைத்ததில்லை-சிறிதும்
உடல் அசைந்ததில்லை
எப்படி நான்பிரிவேன்?-அடடா
இன்பப் பொருளையெல்லாம்
தப்பிப் பிழைப்பதுண்டோ-எனது
சைவம் எனத்துடித்தார்.

# சங்கராச்சாரியாரின் விஷமப் பிரசாரம்.

ஸ்ரீ. ஏ. எம். வெங்கோப ராவ், 13, ராமானுஜ ஐயர் தெரு, சவுக்கார் பேட்டை, (தருமபிரசாரகன்) எழுதுகிறார்:—

ஸ்ரீ சங்கராச்சாரியார் சில நாட்களாக சென்னையில் இருந்து கொண்டு அரிய உபதேசங்களைச் செய்து வருகின்றார். அவருடைய உபதேசங்களை நேரில் கேட்டவருக்கும், அவற்றைப் பத்திரிகைகளில் வாசித்தவருக்கும் அவை பெரும்பாலும் அதர்மத்தையே போதிக்கின்றன வென்பது நன்கு விளங்கும். உதாரணமாக அவர் சென்ற 3-1-33-ந்தேதியில் புரசைவாக்கத்தில் செய்த பிரசங்கத்தில் "பிராமணன் குடிக்கக்கூடாது. வேறுசிலர் குடிப்பது அவ்வளவு நிந்தையல்ல" யென்று கூறினார். பிராமணன் குடித்தால் அவனுக்கு என்ன கெடுதி நேரிடும்? அவனுடைய பொருளுக்கு நஷ்டமா? சரீரத்திற்குக் கெடுதியா? ஆத்மஉணர்ச்சிக்கு விரோதமா? மற்றொருவன் குடித்தால் அவனுக்கு இந்தக்கெடுதிகள் உண்டாகாதா? இது ஜனங்களை ஏமாற்றி அவர்களை கெடுப்பதற்காக செய்யும் உபதேசமல்லவா? மற்றவர்கள் குடிப்பதாலும் மாமிசம் புசிப்பதாலும் தோஷமில்லை யென்று சொல்லி விட்டு பிறகு "அவர்கள் நீசர்கள் தகாத காரியங்களைச் செய்கின்றார்கள். ஆகையால் அவர்களைத் தொடக்கூடாது, தொட்டால் பாவம் வந்து விடும்" என்று கூச்சல் போடுவார்கள்.

"ஏகோ பிரம்மோ
த்விதீயோ நாஸ்தி"

"பிரம்மம்ஒன்றுதான்இருக்கிறது. 2-வது ஒன்று இல்லை" என்பது ஸ்ரீ சங்கருடைய கொள்கை. உலகமேபிரம்ம வியாபகம், ஒவ்வொரு ஜீவனும் பிரம்மத்தின் அம்சம் என்பது அவருடைய போதனை. ஆனால் இப்பொழுது சென்னையில் விஜயம் செய்திருக்கும் ஸ்ரீ சங்கர் ஆதி ஹிந்துக்களை சுவாமி தரிசனம் செய்வதற்காக ஆலயங்களில் விடக்கூடாதென்கின்றார். ஆலயப்பிரவேச மசோதாவிற்கு அனுமதி தரக்கூடாதென்று வைசிராய்க்குத் தந்திகொடுத்து விட்டார். இவருடை மதக்கொள்கைக்கும், பேச்சிற்கும், செய்கைக்கும் எவ்வளவு ஒற்றுமை இருக்கின்றது பாருங்கள்! 'பக்தி பூர்வமாகப்பாவமான ஒரு காரியத்தைச் செய்தாலும் தோஷமில்லை" என்று நமது ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியர் புரசைவாக்கத்தில் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்கள். இந்த அரிய உபதேசத்தைக்கேட்க அன்பர்கள் எத்தனை நாட்கள் தவம் கிடந்தார்களோ தெரியவில்லை. இந்த உபதேசத்தைக் கேட்ட பிறகு கோயில் ஏன்? குளம் ஏன்? சாதி ஏன்? சாஸ்திரம் ஏன்? "எந்தப்பாவம் செய்தாலும் பக்தியோடு செய்து விடு. உன்னைப் பாவம் பீடிக்காது" என்பது நமது சுவாமிகளின் போதனையின் தாத்பரியம். ஸ்ரீ சங்கரர் கொடுத்த லைசென்ஸு மறுஉலகத்தில் செல்லுமோ செல்லாதோ தெரியவில்லை. ஆனால் இவ்வுலகத்தில் செல்லாது என்பது வெள்ளிடைமலைபோல் காணகின்றது. சுவாமி சிரத்தானந்தரைச்சுட்ட முகம்மதிய வாலிபனும், தன்மைந்தனை தூர்க்கா தேவிக்கும் பலிகொடுத்தபூசாரியும்' தன்சிஷ்யனை காளி தேவிக்கு பலிகொடுத்த மந்திரவாதியும் தாங்கள் இச்செயல்களை பக்தியினால்தானே செய்ததாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் மூவரையும் அரசாங்கத்தார் தூக்கிலேற்றினார்கள் அவர்களை எந்த தெய்வமும், எந்த ஆச்சாரியரும் காப்பாற்ற முன்வரவில்லை. ஆகையால் அன்பர்களே! தகாதஒரு காரியத்தை நாம் எந்த காரணத்தினாலும் செய்யக்கூடாது. அவனவன் செய்யும் வினையின்பயனை அவனவனே அனுபவித்துத் தீரவேண்டும். பக்தியினால் அடாத ஒரு காரியத்தைச் செய்துவிட்டால் அது நம்மை விடாது. இந்த ஸ்ரீ சங்கராச்சாரியரும், அவருடைய சிஷ்ய கோடிகளும் நம்மைக்காப்பாற்ற முன்வரமாட்டார்கள். அவர்களால் காப்பாற்றவும் முடியாது. ஆகையால் தீக்கதிக்கு ஏதுவான தீய உபதேசங்களைக்கேளாதீர்கள்.

பிராமணன் யாகம் செய்வதும், பூசாரி கிராம தேவைக்குப் பலி கொடுப்பதும் சரியென்று ஆசாரிய சுவாமிகள் உபதேசம் செய்கிறார்கள். இவை எவ்வாறு சரியோ இறைவனே அறிவன். யாகத்தில் பிராணிகளைக் கொல்லப்படுகின்ற விதத்தைக்கேட்டால் கல்நெஞ்சு படைத்தவனுடைய மனமும் நடுக்குறாமலிராது. உதாரணமாக அஜயாகத்தில் ஆட்டை கத்தியால் வெட்டுவதில்லை. அதை உயிரோடு கொண்டு வந்து அதன் வாயில் உப்பைக்கொட்டி ஒருவன் அந்த வாயை அழுத்திப் பிடித்துக்கொள்வான் மற்றொருவன் அதன் பீஜத்தை க்கட்டையால் நசுக்கி அதைசித்திரவதை செய்து கொல்வான். அது இவ்வாறு வதை செய்யப்படும் பொழுது கத்தினால் யாகத்திற்குப் பங்கம் வந்து விடுமாம் ஆகையால் அதை கத்த விடாமல் அதன் கழுத்தையும் வாயையும் நன்றாய் அழுத்தி பிடித்துக்கொள்வார்கள் அது படுகின்ற மரணவேதனையை ஈசன் ஒருவனே அறிவான் பிராணிகளைக் கொன்று யாகம் செய்வதாலும் பலியிடுவதாலும் யாருக்கு நன்மை உண்டு என்பதை கவனிப்போம். முதலாவது, தெய்வத்திற்கு ஏதாவது பிரயோஜனமிருக்குமா? இராது! இராது! தெய்வம் யாதொரு குறையும் இல்லாதது! கொலையை விரும்பாதது எல்லா ஜீவன்களுக்கும் தாய் தந்தையைப்போன்றது. மனிதன் செய்யும் யாகத்தினாலோ பலியினாலோ யாதாமொன்று ஒருபிரயோஜனத்தை யடையுமானால் அது தெய்வமல்ல. ராக்ஷசனோ, பேயோ, பிசாசோ,

இரண்டாவது, கொல்லப்படும் மிருகங்களுக்கு ஏதாவது நன்மை உண்டா. இல்லை! இல்லை! உண்மையில் அவைகளுக்கு ஏதாவது நன்மை உண்டாவதாயிருந்தால், யாகம் செய்கின்றவர்களும், பலியிடுகின்றவர்களும் தங்கள் சொந்தக்காரர்களையே கொன்று அந்த நன்மையை இவர்களேயடையும்படி ஏன் செய்யக்கூடாது? மூன்றாவது, யாகம் செய்கின்றவர்களுக்காவது பலியிடுகின்றவர்களுக்காவது ஏதாவது பிரயோஜனமுண்டா வென்று பார்த்தாலோ, நாற்றப் புலாலை உண்பதைத் தவிர வேறொன்றிருப்பதாகத் தெரியவில்லை. கொலைசெய்வது அறிவிற்கும் அருளுக்கும் முற்றும் மாறான செய்கையென்று அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள்.

அருள் வடிவமானது கடவுள். அறிவுவடிவமானது ஆன்மா. ஆகையால் இவ்விரண்டிற்கும் விரோதமான ஒரு செய்கை கடவுளுக்கும் பிரீதியைத் தராது ஆன்மாவிற்கும் இதத்தையளிக்காது.

ஆகையால் அன்பர்களே! ஸ்ரீ சங்கராசாரியாரின் அதர்ம மொழிகளைக் கேட்டு மோசம் போகாதீர்கள்! எந்தக்காரணத்தினாலும் எவ்வித பாவத்தையும் செய்யாதீர்கள். கொலை, பொய், களவு, காமம், அவா ஆகிய குற்றங்களை நீக்குங்கள்............ வெ......................... ளி வேஷம் வேண்டாம்! வேண்டாம்!

(தமிழ்நாடு)

# ரஷியாவில் திருமணத்தின் தெய்வீகம் எங்கே?

சோவியத் ரஷியாவில் பழைய பழக்க வழக்கங்களை யெல்லாம் அடியோடு ஒழித்துவிட்டனர். இத்துடன் அங்கு விவாகத்தையும் ஒரு சாதாரண சம்பவமாக்கி யிருக்கிறார்கள், இங்கு கலியாணத்திற்கென ஏற்பாடுகள் எதுவும் கிடையாது. சாதாரணமாக ஹோட்டலுக்குச் சென்று ஒரு "கிளாஸ்பீர்", குடிப்பதற்கொப்பாக இங்குவிவாகக்கோலம் மாறியிருக்கிறது. ஆண், பெண் இருவரும் ஏதோ உலாவப் போவது போல் செல்லுவார்கள். அன்று கலியாண மாகிவிடும்; மறுநாள் அவர்கள் விவாகரத்து செய்து பிரிந்து விடுவார்கள். கலியாணமும், விவாகரத்தும் அங்கு சர்வ சாதாரணமாகி விட்டது. கலியாணத்திற்கும், தேசத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அதைப்பற்றி சட்டங்களுமில்லை. ஆனால் அவர்களுக்கும் பிறக்கும் குழந்தைகள் பெற்றோருக்குச் சொந்தமல்ல. குழந்தைகள். சோவியத் சர்க்காருக்கே சொந்தமாகும் சோவியத் ரஷியாவுக்கு அடுத்த படியில் அமெரிக்காவை எடுத்துக் கொள்ளலாம். அங்கு "விடுதலை" என்ற தாராளக் கொள்கையின் போர்வையில் பெண்கள் சுதந்திரமென மனம் போனவாறு நடந்து கொள்ளுகிறார்கள். சதி பதிகள் நினைத்தபோது ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்து கொள்ளலாமென்று நிபந்தனை மீது கலியாணஞ் செய்து கொள்ளும் வழக்கத்தை அங்கு மேற்கொள்ள வேண்டுமென சிலர் பிரசாரஞ் செய்து வருகிறார்கள்.

வேறு சிலர் நிர்வாண வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென றும் எவரும் எந்தப் பெண்ணுடனும் ஜீவித்து வந்தால், உலகில் தற்போதுவரும் பேதங்களும், துவேஷமும் உயர்வு தாழ்வும் தானகவே மறைந்து விடுமென்றும் கருதுகிறார்கள்.

திரோ பிரியாண்ட் என்னும் தீவில் வசிக்கும் சுதேசிகள் வெகு கட்டுப்பாடாக நடக்கிறார்கள். ஆனால் அவர்கள் குழந்தைகளை சுதந்திரமாக வளர்த்து வருகிறார்கள். கலியாண விஷயத்தில் மக்கள் தங்களுக்குப் பிரியமான பெண்ணைத் தேடிக் கொள்ளுவதில் பெற்றோர் குறுக்கிடுவதே கிடையாது. பெண்களைத் தேடிக் கொள்ளும் பொறுப்பும் சுதந்திரமும் மக்கள் அனைவருக்கும் உண்டு.

(தமிழ்நாடு)

---

## பாப்பாக்குடி.

7-1-33ந் தேதி பாப்பாக்குடி ஆதி திராவிடத் தெருவில் திருநெல்வேலி ஆதிதிராவிட மகாஜன சபையின் பிரசாரக்கூட்டமொன்று தோழர் ஜே. ஏசுவடியான் ஜான் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபொழுது தோழர்கள் ஜே. செஸ்டன் பி. டி. சீனிவாசன் அருணாசலம் முதலியவர்கள் முறையே "நமது கடமை" "தீண்டாமை" "கல்வியின் அவசியம்" என்பதுபற்றி பேசினார்கள். தீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம் இனிது கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

# புதுமை! புதுமை!! என்றும் கேட்டிராத புதுமை!!!

(சித்திரபுத்திரன்)

புதுமை! புதுமை!! என்றும் கேட்டிராத புதுமை!!! என்றால் என்ன?

முதலாவது:-வெகு நாளாய்மறைந்திருந்த சித்திரபுத்திரன் திடீரென்று தோன்றியது ஒரு புதுமை.

இரண்டாவது:-சித்திரபுத்திரன் வெளியிடப் போகும்சேதி ஒரு புதுமை.

மூன்றாவது:-வேடிக்கை புதுமை என்னவென்றால்,

தோழர்களே! கும்பகோணத்தில் நடைபெறப்போகும் மகாமகவிசேஷத்தில் ஒரு புதுமையான வியாபாரம் நடைபெறப் போகின்றது.

தேசத்தில் பஞ்சம்! பஞ்சம்!! பணப் பஞ்சம்!!! நில்லு நில்லு யாருக்கு பஞ்சம்?

சோற்றுக்கு இருந்தால் மாத்திரம் போதாது. நாடகத்துக்கு பணம் வேண்டாமா? குடிக்கிறதுக்கு பணம் வேண்டாமா? கூத்தியாளுக்கு பணம் வேண்டாமா? மோட்டாருக்கு பணம் வேண்டாமா? இந்த இழவுகள் எல்லாம் எப்படியோபோகட்டும்என்றால் எலக்ஷனுக்காவது பணம் வேண்டாமா? நில்லுநில்லு ஒரு சங்கதி என்னவென்றால் எலக்ஷனுக்கு பணம் என்னத்துக்கு? செலவு செய்த பணம் மெம்பர்-பிரசிடெண்ட் உத்தியோகம் கிடைத்தவுடன் சம்பாதித்தது ஆன செலவும் போக மீதியும்ஏற்படுமே அதை ஏன் இதில் சேர்க்கிறாய் என்று கேட்பீர்கள் அது சரியான கேள்வியாகாது ஏனெனில் தோற்றுப் போகிறவர்களுக்கும் செலவாகும். பிரசிடென்ட் போட்டிசேர்மன் இல்லா விட்டால் மெம்பர்களுக்குப் பணம் கிடையாது மற்றும் பல காரணத்தாலும் எலக்ஷன் செலவு உண்டு. சிநேகிதனுக்காக என்று எத்தனை பேர் "இதாவது ஒரு வேலை கிடைத்ததே" என்று வீட்டுப் பணத்தை பாழாக்குகிறவர்கள்எவ்வளவு பேர்? ஆகவே பல வழிகளிலும் மிராசுதார்களுக்கு பணம் வேண்டியிருக்கிறது. கல்யாணத்தை வேண்டுமானாலும் பணத்துக்காககொஞ்சநாள் தாமதிக்கலாம். இழவுக்கு ஒரு நாளாவது பொறுக்க முடியுமா? ஆகையால் அதற்கும் வேண்டியிருக்கிறது.

போதாக் குறைக்கு சர்க்காரும் சுயமரியாதைக்காரன் பேச்சைக் கேட்டுக்கொண்டு திரிகின்றது. நில்லு நில்லு சந்தடி சாக்கில் இதென்ன புது சங்கதி? என்று கேட்கலாம். விசேஷம் ஒன்றும இல்லை. தஞ்சாவூர் மிராசுதாரர்கள் மேற்கண்ட செலவை யெல்லாம் உத்தேசித்து நெல்லு கலம 0—11—0 அணா ஆகிவிட்டதால் சர்க்காருக்குக் கிஸ்தி கட்ட பணமில்லை என்று கருதி "மிராசுதார் கூட்டம் போட்டு" "தீர்மானம் நிறைவேற்றி" கிஸ்து குறைக்கவேணடும்; வகுலுக்கு வாய்தா கொடுக்க வேணடும் என்றெல்லாம் கேட்டார்கள். இதை சுகண்ட சுயமரியாதைக்காரன் பிச்சை போடா விட்டாலும் நாயை இஸ்கே படுத்தி விடாமலாவது இல்லாமல் "என்னத்துக்காக வரி தள்ளவேண்டும், குடிக்கும் கூத்திக்கும் வைதீகத்திற்கும் செலவுக்குப் பணம் இல்லாவிட்டால் அதற்கு சர்க்காரார் பொறுப்பாளியா கண்டிப்பாய் யாருக்கு வரி குறைத்தாலும் தஞ்சாவூருக்கு மாத்திரம் வரி குறைக்கக்கூடாது" என்று சர்க்காருக்கு கம்பி இல்லாத தந்தி பேசி கடைசியில் "கூட்டமும்" 'தீர்மானமும்" குப்பைத்தொட்டியில் போடும்படி செய்து விட்டார்களே இந்த சு. ம க்காருடைய நன்றி கெட்டத்தனம் எவ்வளவு என்று பாருங்கள். சு. ம. வுக்கு வேலை செய்கிற வெட்டி ஆள்கள் எல்லாம்தஞ்சாவூர் ஜில்லாக்காரர் இதனால்வெகுகுடும்பம்கெட்டுப்போய் வெகு பேர்கள் சோம்பேரிகளாகி விட்டார்கள். சு. ம. காரனை வண்டியில் வைத்து முதல் முதல் இழுத்தவர்கள் தஞ்சாவூர்ஜில்லாக்காரர்கள். தஞ்சாவூர் ஜில்லாக்காரர் தான் 6 குதிரை கட்டி இழுத்தவர்கள். தஞ்சாவூர்ஜில்லாகாரர்தான் சு. ம.காரன் வீட்டு சுவற்றில் ஒரு சதுரஅடி சுவறு கூட கண்ணுக்குத் தெரிய மார்க்கமில்லாமல் வீட்டுக்கார அம்மாள் கோபப்பட கோபப்பட சுவரெல்லாம் ஆணி அடித்து மாட்டி இருக்கும் "உபசாரப் பத்திரம்" எல்லாம் முக்கால் வாசி முனிசிபாலிட்டி உள்பட தஞ்சாவூர் ஜில்லாக்காரருடையது தான் இன்னும் என்ன என்னமோ. இவ்வளவும் இருக்க தஞ்சாவூருக்கு வரி குறைக்க வேண்டாம் என்றால் இது எவ்வளவு நன்றிகெட்ட தனம்-உண்ட வீடுக்கு இரண்டகம் நினைக்கும் தனம். என்று பலர் கேள்க்கக்கூடும் இதைப் பற்றி பிறகு பேசிக் கொள்ளலாம்.

இது எப்படியோ இருக்கட்டும் எடுத்த சங்கதியை விட்டு விட்டு சித்திர புத்திரன் எங்கெங்கோ வாய் வைத்து விட்டான் என்ற இலக்கணப் பிழை ஏற்படாமல் பழைய சங்கதிக்குப் போகலாம்.

ஆகவே இப்படிப் பட்ட பஞ்ச காலத்தில் ஒரு புதுமையான வியாபாரம் நடை பெறப்போகின்றது. என்ன அநியாயம்! என்ன அநியாயம்!! என்ன அநியாயம் !!! மனதில் நினைக்கவே பயமாய் இருக்கிறது வாயில் பேசவே பயமாய் இருக்கிறது எப்படி தான் உலகமறிய கையில் எழுதுவது என்று தோன்றுகின்றது. ஆனாலும் புதுமையை வெளிப்படுத்தாத பத்திரிகை இருந்தென்ன? செத்தென்ன? இந்த நல்ல புதுமையை வெளியிடாத சித்திரபுத்திரன் இருந்தென்ன அந்தமானுக்கு போயென்ன? ஆகையால் போவதற்குள் அதை வெளியிட்டு விட்டு போய்விடலாம் என்று துணிந்து சொல்லத் துணிகின்றேன்.

அதாவது விபசாரத்தனம் என்றால் இத்தனை காலம் பெண்களுக்கு மாத்திரந்தான் சொந்தமாய் இருந்தது: இப்போது சுயமரியாதை இயக்கம் ஏற்பட்ட பிறகு அது ஆண்களுக்கும் சொந்தமாய் விட்டது. எப்படி என்றால் சு. ம. காரன் பெண்களைக் காப்பாற்றப் போவதாய்ச் சொல்லி "விபசார தோஷம் பெண்களுக்கு மாத்திரம் தான் சொந்தமோ ஆண்களுக்கும் அது ஏன் சொந்தமாய் இருக்கக் கூடாது" என்று பேசிப்பேசிசும்மா கிடந்த ஆண்களைத் தூண்டி விட்டு கொஞ்சம் கொஞ்சமாய் ஆண்களையும் விபசார தோஷத்துக்கு ஆளாகும்படி செய்து விட்டார்கள். அது இப்போது "தோலைக் கடித்து, துருத்தியைக் கடித்து, செருப்பைக் கடித்து கடைசியில் வேட்டை நாய் ஆனது" போல் ஆண்கள் விபசாரித்தனமானது பெண்கள் விபசாரித்தனம் போலவே அதாவது திருட்டுத்தனமாய்ச் செய்து வெளிப் படையாய் செய்து, வீட்டை விட்டுக் கிளம்பி கூத்தியாளாகி விலைமாதாகிச் சந்துபொந்துகுச்சுக்காரியாகி, கடைசியாக உற்சவத்தில் வியாபாரம் நடத்தும் குச்சுக்காரி என்கின்ற நிலைமைக்கு எப்படி வந்துவிட்டதோ அது போலவே ஆண்களும் விபசாரனாகி மாமாங்க உற்சவத்தில் சில அறைகள் வாடகைக்குவாங்கிக்கொண்டு பணத்துக்காக பெண்களிடம் பணம் வாங்கிக்கொண்டுவிபசாரத்தனம்செய்வது என்கின்ற துணிவின் மீது இப்போதே பலர் கும்பகோணம் வந்து இறங்கிவிட்டார்கள். அதற்காக சில வீடும் பிடித்துக்கொண்டார்கள். இவர்களுக்கு தரகர்களாக சில பெண்களையும் அழைத்து வந்திருக்கிறார்கள். அவர்கள் உற்சவத்திற்கு பெண் விபசாரிகளுக்கு தரகர்களாய் இருக்கும் ஆண் தரகர்கள் மற்ற ஆண்களிடம் எப்படி வந்து, சார் கொஞ்சம் பொடி கொடுக்கிறீர்களா என்று கூப்பிட்டு, இந்த கடுக்கன் எங்கு வாங்கினீர்கள்! இந்தமோதிரம் எங்கு வாங்கினீர்கள் ஜில்ல்ல்லென்று ஜொலிக்கின்றதே என்று ஆரம்பித்து மெள்ள மெள்ள சங்கதிஆரம்பிப்பதுபோலவேசில பெண்தரகர்களும் உற்சவத்திற்கு வந்த பெரிய இடத்து பெண்களிடம் சென்று அம்மாகொஞ்சம் சுண்ணாம்பு கொடுக்கின்றீர்களா? என்று ஆரம்பித்து இந்த கம்மல் எங்கு வாங்கினீர்கள்? இந்த புடவை எங்கு வாங்கினீர்கள் என்று பேசி மெள்ளமெள்ள சங்கதிகள் பேசத்தர்ப்பித்து செய்து கூட அழைத்துக்கொண்டு போயிருக்கிறார்கள்.

இதற்காக நகைகள், உடுப்புகள், சென்னை எஸ். எஸ். ஆனந்தம்கம்பெனியிலும், திருச்சி சிங்காரம் கம்பெனியிலும், சென்னை அருணகிரி கம்பெனியிலும் பலவித மருந்துகள் வாங்கிக்கொண்டு, நில்லு நில்லு இதென்னையா புதுமையிலும்புதுமை விபசாரத்தில் பணம் சம்பாதிக்கபோகிறவனுக்கு மருந்தென்ன என்று கேள்கலாம். விபசாரத்தில் பெண்களுடன் ஆண்கள் போட்டிபோட முடியாது. ஏனென்றால் அது கடவுளே பெண்களிடம் கருணை வைத்து அவர்களை எவ்வளவு வேண்டுமானாலும் விபசாரம் செய்யப்பட இடம் கொடுத்துவிட்டான். ஆண்கள் மீது கோபப்பட்டோ அல்லது பொறாமைப்பட்டோ வரையரை ஏற்படுத்திவிட்டான். இந்த வைத்தியர்கள் கடவுளோடு போட்டி போடத்துணிந்து இப்போது என்ன என்னமோ மருந்துகள் செய்திருக்கிறார்களல்லவா ஆதலால் இந்த மருந்துகளையும் வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். இதனால் பெண்கள விபசாரித்தனத்துக்கு ஆண்கள் கொடுக்கவேண்டிய சார்ஜைவிட ஆண்கள் விபசாரத்திற்கு பெண்கள் கொடுக்கவேண்டிய சார்ஜ் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும். ஏனென்றால் மருந்துக்கு பணம் வேண்டியிருக்குமல்லவா? ஆதலால் கும்பகோண மாமாங்கத்துக்கு போகின்ற ஆண்கள் ஷோக் பேர்வழிகள் குடும்ப சகிதமாய் போவதானால் நில்லு! நில்லு போவதானால் என்பதென்ன போய்த்தானே ஆகவேண்டும். ஏனென்றால் மகாமகபுராணம் படித்தால் அந்த சங்கதி தெரியும். மாமாங்கக் குளத்தில் குளிக்கும் போது பெண் ஜாதியும் புருஷனுமாய் குளித்தால் தான் புண்ணியம் இல்லாவிட்டால் புண்ணியமும்போய் பாபமும் ஏற்படுவதல்லாமல் செலவு பண்ணின காசும் வீணாய் விடும். ஆதலால் சம்சாரத்துடனேயே போயாகவேண்டும், இப்படிப் பட்ட மற்ற செலவும் இரட்டிப்பாய் விடும். இந்த பஞ்ச காலத்தில் சர்க்காரர்வரி குறைக்காத காலத்தில் மிராசுதாரர்கள், பிரபுக்கள், ஜமீன்தாரர்கள் மற்ற செல்வவான்கள் மாமாங்கம் போவதென்றால் இந்த புதிய வியாபாரத்தால் நிலைமை கஷ்டமாக ஏற்பட்டு விட்டது.

நிற்க, இந்த மாதிரி ஆண்களும் விபசார வியாபாரம் செய்வது என்பதுமேல்நாட்டிலதான் வழக்கத்திலி

ருப்பதாய் கேள்விப்பட்டது உண்டு. ஆனால் நமது நாட்டில் சில ஆண்கள் இந்த மகாமக புண்ணிய காலத்தை உத்தேசித்து வயிற்றுக்கொடுமைக்காக பணம் சம்பாதிக்க இந்தமாதிரி ஒரு வழி கண்டு பிடித்து உற்சவத்தின் போது கடை போட்டிருக்கிறார்கள் என்றால் இது புதுமை அல்லவா?

இந்தமாதிரி ஆண்கள் விபசாரக்கடைகள் மற்ற புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் போகும் போல் தோன்றுகின்றது. ஆதலால் சென்னை மாகாண விபசாரச்சட்டத்தில் விபசாரம் என்பதற்கு வியாக்கியானம் செய்யும் போது "பெண்ணுயிருந்தாலும், ஆணுயிருந்தாலும் பணத்துக்காக விபசாரத்தனம் செய்தால்" என்று ஒரு திருத்தம் போடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இதற்கெல்லாம் காரணம் இந்த மாதிரி "புண்ணிய க்ஷேத்திரங்கள்" என்றுதான் சொல்லவேண்டும். எப்படிப்பட்ட சட்டம் செய்தாலும் புண்ணிய க்ஷேத்திரங்கள், புண்ணிய தீர்த்தங்கள், புண்ணிய மூர்த்தங்கள் ஒழிந்தாலல்லது விபசாரத்தை நிருத்திவிடலாம் என்று நினைத்து சட்டம் செய்வது சட்டசபை அங்கத்தினர்களின் முட்டாள்தனம் என்றுதான் சொல்லுவேன். இந்தப்புதுமை இதற்குமுன்னும்இரண்டொருபுண்ணியக்ஷேத்திரங்களில்இருந்து வந்திருக்கின்றது. அதுஎங்கே என்றால்பிள்ளைவரத்துக்காகஎன்று செல்லும் க்ஷேத்திரங்கள் சிலவற்றில்ஆண் விபசாரகர்கள்சிலர் இருந்து பணம் சம்பாதித்து வந்திருக்கிறார்கள். வருகிறார்கள். ஆனால் அது மதசம்பந்தமான கணக்கில் தாக்கலாய் வந்ததால் அதைப் பற்றிய விளம்பரம் இல்லாமல் இருந்தது. ஆனால் இப்போது ஆண்களுடைய குஷாலையும் சௌகரியத்தையும் எதிர்பார்த்து வயிற்றுக் கொடுமைக்காக பெண்கள் நடத்துவதுபோல் பெண்களுடைய குஷாலையும் சௌகரியத்தையும் ஆண்களின் வயிற்றுக் கொடுமையையும் உத்தேசித்து வியாபார முறையில் ஆண்கள் இந்த விபசாரித்தனம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். முதல் முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த புது வியாபார முறையானது இந்த மகா புண்ணிய ஸ்தலமாகிய கும்பகோண க்ஷேத்திரத்தில் அதுவும் மகா புண்ணிய காலமான 12 வருத்திற்கு ஒரு தடவை வரும் மகாமகபுண்ணிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் எல்லாம் வல்ல விசாலாட்சி சமேத விஸ்வநாத ஸ்வாமிகள் இதைஎன்றும் நிலை பெறவும் எங்கும் பரவவும் அருள் புரிவாராக.

"எவ்வளவு தான் தெய்வத்தன்மை இருந்த போதிலும் (தெய்வத்தாலாவ மனினும்) மனுஷ எத்தனமும் இருந்தாக வேண்டும்" என்பதுபோல் மகாமகத்துக்கு வரும் சதிபதிகள் ஒருவரைப்போல் ஒருவர் ஆண்களைப்போல் பெண்கள் நடந்து கொள்ளவேண்டும் என்கின்ற முறையில் இந்தப் புதுத்தொழிலை ஆதரிப்பார்களாக. பாவமோ புண்ணியமோ தோஷமோ விசேஷமோ எல்லாம் ஆண்களைப் போலவே தானே ஒழிய பெண்களுக்கு என்று வேறு வித மாறுதல் இல்லை. இருந்தாலும் மகாமகதீர்த்த ஸ்தானத்தின் பயனாய் சர்வ தோஷமும் பாவமும் பறந்து போகும். ஆகையால் கவனிக்க கவனிக்க தயவு செய்து கவனிக்கக் கோருகிறேன்.

---

## நாகை சுயமரியாதைச்சங்கம்.

### வாராந்திரக்கூட்டம்.

22-1-33ந்தேதி மாலை 6மணிக்கு சங்கத்தலைவர் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் வாராந்திரக்கூட்டம்கூடியது.

"முதலாளியும் தொழிலாளியும்" என்பது பற்றி தோழர்கள் எம். கோவிந்தராஜ், வி. முருகையா, ஆர். கிருஷ்ணசாமி. எம். எஸ். ராஜகோபால் எம். ஏ. கோவிந்தசாமி, டி. எஸ். மணி, கே. முருகேசன் முதலியவர்கள் பேசினார்கள். தலைவர் முடிவுரையோடு இரவு 9மணிக்கு கூட்டம்முடிந்தது.

### வாராந்திரக்கூட்டம்.

29-1-33ந்தேதி மாலை 9மணிக்கு வாராந்திரக்கூட்டம் சங்கத்தலைவர் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் நடந்தது. தோழர்கள் குஞ்சு, பி. அழகர்சாமி, சுயமரியாதைக்கீதம் பாடினார்கள்.

"மீரத்சதிவழக்கு தீர்ப்பு-சரியா-தப்பா" என்பது பற்றி தோழர்கள் எம். ஆர். பதி, வி. சாமிநாதன், எம். கோவிந்தராஜ். வி. முருகையா, கே. முருகேசன், முதலியவர்கள் பேசினார்கள். தலைவர் முடிவுரையோடு இரவு 9மணிக்கு கூட்டம் கலைந்தது.

என ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்,

---

## திருவாரூர்.

### செங்குந்தர் நாலாவது மகாநாட்டின் வரவேற்புக்கூட்டம்.

ஷை மாகாநாட்டின் வரவேற்புக் கூட்டம் திருவாரூர் மடப்புரம் விநாயகராலயத்தில் 6-2-32ல் நடை பெற்றது.

கூட்டத்திற்கு தோழர் டி. கே. எஸ். கல்யாண சுந்தர முதலியாரவர்கள் தலைமை வகித்தார் "நான்காவது மகாநாடு" என்பது பற்றி தோழர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் பேசினார்கள் பின் மகாநாட்டை மார்ச்சுமாதம் 12 13-ந் தேதிகளில் திருவாரூரில் நடத்துவதென்றும், நான்கு மகாநாடுகள் நடத்துவதென்றும் இன்னும் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## மாமண்டூர் (காஞ்சி) குடிமக்களின் நிலைமை.

(தோழர் ம. சிங்காரவேலு)

மாமண்டூர் என்ற கிராமத்தில், சுமார் 1000 குடி மக்கள் வேலை இன்றி, உணவு இன்றி, சென்ற இருபது நாளாக வாதைப்படுவதாகக் கேள்விப்பட்டு, நான் இன்னுஞ் சில தோழர்களுடன் காஞ்சிபுரத்திற்குச் சென்றிருந்த காலை அதனருகே உள்ள அந்தக் கிராமத்திற்குச் சென்றோம். அவ்விடத்தில், எனது பழைய நண்பரும் அந்தக் கிராமத்தில் நிலச சொந்தக்காரருமான, தோழர் பார்த்தசாரதி ஐயங்காரையும் சந்தித்தோம். அவரிடத்தும் சிலஉத்தியோகஸ்தரிடத்தும்,பெரும்பான்மையான குடி மக்களிடத்தும், அந்த கிராமத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணத்தையும்விசாரித் தறிந்தோம். மொத்தத்தில் சொல்ல வேண்டுமானல், அக்கிராம சொந்தக்காரர்கள் பெரும்பான்மையும் பிராமணர்களாக இருந்து வருகின்றார்கள். அவர்கள் நிலங்களை உழுது பயிரிடும் பண்ணை ஆட்கள் தான். அந்த கிராமத்தில் உள்ள குடி மக்கள் இவர்களுக்கு நிலச் சொந்தக்காரர்கள் கொடுத்து வரும் கூலி போதாதென்பதே, இவர்களுடைய வாதம். இந்தக் குடிமக்கள் தங்களை ஒன்றும் கேட்காமலே அறுவடை காலத்தில் வேலை செய்ய மறுத்தமையால் அவர்கள் முதலில் வேலையில் இறங்கட்டும், அதன் பின்னர் கூலி உயர்வை பார்த்துக் கொள்ளலாமென்று ஒரு நிலச் சொந்தக்காரர் சொன்னார். இதுவே இவ்விருகட்சியாரின் வாதம். எனக்கு இப்பால் வந்த கடிதத்தால் நிலைமை ஒன்றும் மாறவில்லை என்றே தெரிகிறது. எங்களுக்குத் தெரிந்தவரை கிராமம் அமைதியாகவே இருந்து வருகிறது. ஸெக்ஷன் 144 அந்த கிராமக்குடி மக்கள் மேல் விட்டிருப்பதற்குஎன்ன காரணமோ அது விளங்கவில்லை. அதனை விளக்குமாறு லாயர்மாரைக் கொண்டு, கோர்ட்டில் மனுக் கொடுக்க பிரயத்தனப் பட்டு வருகின்றார்கள். ஆனால் அந்தக் குடி மக்கள், பரம ஏழைகளாகவே தோன்றுகிறது. எந்த லாயர் புண்ணியவானுகிலும், இந்தக்கேசை எடுத்துக் கொண்டு, ஏழைகள் பால் காருண்யம் காட்டும்படி பிரார்த்திக்கின்றோம்.

வேலை நிறுத்தம் எந்தக் காரணத்தால் நேர்ந்தபோதிலும், சுமார் 1000 மக்கள் பசியும் பட்டினியுமாக வதைவது, சகிக்கக்கூடாத காட்சியேயாகும். இதனை காஞ்சீபுர வாசிகளுக்கு எடுத்துக்காட்டினேம். நமக்கு ஜாதி, சமய வித்தியாசத்தைக் குறித்துக் கவலையில்லை. யாராயிருப்பினும், கஷ்ட காலத்தில் உதவி புரிவதே மானுஷீகமாகும். முதலாளி தொழிலாளிகளுக்குள் நேரிடும் போராட்டத்தில் வதைந்து சிதைந்துப் போகின்றவர்கள், தொழிலாளிகளே. அந்த விதமான திட்டத்தில் நமது கடமை இவ்விதத்தவர்களுக்கு உதவி புரிவதே புருஷ லட்சணமென்போம். ஆனால் ஒன்று சொல்ல கடமைப்பட்டுள்ளோம். ஏழைகள் பசி பொறுக்காமல் சரணாகதி அடையலாம். ஆனால் அந்த வருத்தம் மனதில் இருந்தேவரும். அதனால் இருதிறத்தாரும் சுகமடையமாட்டார்கள்.

சில போலீசார் ஏழைகளை வேலைக்குப் போகும்படி பயமுறுத்துகிறதாகவும் கேள்வி. அது உண்மையானல் வெறுக்கத்தக்கதே. தொழிலாளி முதலாளி போராட்டத்தில், அதிகாரிகளுக்கு. நடுநிலைமை வகிப்பதுதான், அழகென்போம. அதற்கு மாறாக நடந்தால், நியாயத்திற்கும் நீதிக்குள் பொருந்தாவென அறியவேண்டும்.

அந்த கஷ்டங்கள் எப்படி இருந்த போதிலும், நமது கடமையை மறக்கலாகாது. அந்த ஆயிரம் பேருக்கு வேலைக்குப் போகும் வரை, கால் வயிற்றுககாகிலும் கஞ்சி ஊற்றவேண்டும. ஒரு வண்டி நெல் அவர்கள் உதவிக்கு அனுப்பப்படுகின்றது. காஞ்சீபுர வாசிகளும் உதவி செய்ய முன வருகிறார்கள். சென்னை வாசிகளையும் அந்த உதவியில் சேரும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம். எந்த உதவியாயிருப்பினும் அரிசியோ, பணமோ, அதனை பெரிய காஞ்சிபுரம், இராஜா வீதி நெ. 40 தோழர் குப்புசாமிக்கு அனுப்பலாம். உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே என்றார் பெரியோர்.

---

## பூலாம்பாடி தாழ்த்தப்பட்டவர்களின் கூட்டம்: —

இச்சங்கத்தின் கூட்டம் 5-2-33ந் தேதி நடைபெற்றது அக்கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேறியது அவைகளில் முக்கியமானவை:-

"சுயமரியாதை இயக்கம்" பொதுவாக உலக பொதுஜனங்களின் முன்னேற்றத்திற்கும், குறிப்பாக "இந்தியாவில் தாழ்த்தப்பட்ட வர்களின்" முன்னேற்றத்திற்கும் பாடுபடும் இயக்கம் என்பதை ஒப்புக்கொள்ளுவதோடு, ஷை இயக்கத்தின் இலட்சியத்தையும் ஷை இயக்க சமதர்ம கட்சியாரின் வேலைத்திட்டத்தையும் இச்சங்கம் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளுகிறது ஒரு நிருபர்.

## சிவகாசி.

### சுயமரியாதைச்சங்கம்

ஷை சங்கத்தின் அவசரக்கூட்டம் தை மாதம் 21ந்தேதி தோழர் எ. தங்கப்பாஅவர்களின் தலைமையில் நடை பெற்றது. அதுசமயம் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறியதென ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

# ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்.

## பல இடங்களில் சொற்பொழிவுகள்.

### சென்னையில் சுயமரியாதைத் திருமணம்.

சென்னை ராயபுரம்ஆதம்சாகிப்தெருவில் உள்ள தோழர் பெரியசாமி நாடார் அவர்கள் குமாரத்தி தோழர் ராசாத்திக்கும், விருதுநகர் தோழர் அ. த. நாராயண நாடார் குமாரர் தோழர் தங்கபெருமாளுக்கும்ஷையார் வீட்டில் 5-2-33ந் காலை 10 மணிக்கு சு. ம திருமணம் தோழர். ஈ. வெ. ராமசாமி அவர்கள் அக்கிராசனத்தில் பண்டிதர் திருஞான சம்பந்தம் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

சென்னைத்தோழர்கள் ஏராளமாய் விஜயம் செய்திருந்தார்கள்.

திருமணம் நடந்தவுடன் தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல்., டி. வி. சுப்பிரமணியம், ரத்தினசாமி, எஸ். வி. லிங்கம் முதலிய பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

சென்னையில் உள்ள எல்லா சுயமரியாதை சங்கத்தைச்சேர்ந்த பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

---

### மாயவரத்தில் சுயமரியாதைக் கூட்டம்.

மாயவரத்தில் தோழர் நடராஜன் தாயார் காலமானதை முன்னிட்டு தோழர் ஈ. வெ. ரா சென்றிருந்த சமயம் அங்கு சுயமரியாதை சங்கத்தாரால் ஒரு வரவேற்புக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. 7-1-33ல் மாலை 5-மணிக்கு காவேரி ஆற்றில் மாயவரம் சு-ம சங்கத்தலைவர் தோழர் எம்.கல்யாணசுந்தரமதவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. ஆரம்பத்தில் தோழர் நடராஜன் ஈ. வெ. ராவுக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்த பிறகு தோழர் சாமி சிதம்பரனார், சங்கராச்சாரியும், சுயமரியாதையும் என்பது பற்றி பேசினார்.

பிறகு தோழர் எஸ். குருசாமி பி. ஏ., சுயமரியாதையும், கல்வியும், என்பதுபற்றி பேசினார். பிறகு தோழர் ஈ வெ. ரா. உபசாரப்பத்திரத்துக்கு பதிலளிக்கும் முறையில் நமது இயக்கம் ஏன் மதத்தையும், மதத்தலைவர்களையும், மதக்காப்பாளர்கள் என்பவர்களையும் கண்டிக்கின்றது என்பதைப்பற்றி1-30 மணி நேரம்பேசினார். கூட்டத்திற்கு சுமார் 1000 பேர்களுக்குமேல் கூடியிருந்தார்கள். முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள். பார்ப்பனர்கள் முதலியவர்கள் அதிகமாகக் காணப்பட்டார்கள். இரவு 8-30 மணிக்கு தலைவர் முடிவுரைகூறி கூட்டம் முடிவுபெற்றது. கூட்டத்திற்கு கஞ்சை;கும்பகோணம், மன்னார்குடி, நீடாமங்கலம், சீர்காழி, கொடவாசல், கார்குடி, பேரளம், அருப்புக்கோட்டை, நாகப்பட்டினம், பாபநாசம், கொரடு, வலங்கிமான் முதலிய சுற்றுப்பக்கங்களிலிருந்து தொண்டர்களும், பல உத்தியோகஸ்தர்களுமாய் அனேகர் விஜயம் செய்திருந்தார்கள்.

---

### கும்பகோணம் சுயமரியாதைத் திருமணம்.

8-2-33ந் தேதி காலை 10 மணிக்கு கும்பகோணம் சுயமரியாதை சங்கத் தலைவர்தோழர் நீலமேகம் அவர்களது சிறிய தந்தையார் குமாரர் தோழர் ஷண்முகம் அவர்கட்கும், தோழர் பாபாததி அவர்கட்கும் தோழர் சாமி சிதம்பரனார் அவர்களின் தலைமையில் திருமணம் நடந்தது.

மணமக்கள் சபைக்கு வந்ததும் தங்கள் ஒப்பந்தங்களை (தாளில் அச்சடித்திருந்ததை) வாசித்தார்கள். பிறகு தோழர் ஈ. வெ. ராமசாமி "திருமணமும், பெண்கள் நிலையும்" என்பதுபற்றி 1-மணி நேரம்பேசினார் பின்னர் பலர் பேசினார்கள். தலைவர் முடிவுரை கூறினார்.

திருமணத்திற்கு சுமார் 1000 பேர் பெண்கள், ஆண்கள் வந்து நிறைந்து இருந்தார்கள். பெண்கள் நிலையைப்பற்றி பேசும்போது ஆண்களில் சிலருக்கு மனவருத்தமிருந்தாலும், பெண்கள் பலருக்கு மிக மிக திருப்தியாய் இருந்தது.

தோழர்கள் ஆர்.கருப்பணசாமி, ஆர். சி. வெங்கிட்டராம், கே. குப்புசாமி மாயவரம் டி.சின்னையா, நாகைமணி, கே. எல். சுப்பிரமணியம், பாண்டுரங்கம், மன்னார்குடி பாலு, பட்டுக்கோட்டைமருதமுத்து, ரத்தினம் மற்றும் சுற்றுப்பக்கங்களிலிருந்து அனேகர்களும் உள்ளூரில் அனேக பெரியோர்களும் வந்திருந்தார்கள்.

---

### அடுத்தவாரம்

அடுத்தவாரம்சென்னிமலையூனியன் போர்டில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கட்கு நடந்தஉபசாரக்கூட்ட நடவடிக்கையும், தோழர் ராமசாமி சொற்பொழிவும வெளிவரும்.

---

## "காருண்ய" சர்க்கார் கவனிக்குமா?

விபசாரத்தடுப்பு மசோதா சென்னையிலும், மதுரையிலும், ஸ்ரீரங்கத்திலும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டாய்விட்டது. மற்றும் பல ஊர்களிலும் அமுலுக்குக் கொண்டுவர முயற்சிக்கப்படுவதாய் தெரிய வருகிறது. விபசாரத்தடுப்பு மசோதா அமுலுக்கு கொண்டுவர அவசியமாகின்ற பட்டணங்கள் எது எது என்று ஒருவர் அறிய விரும்பினால் அதற்காக கஷ்டப்பட்டு தகவல் தேடவேண்டிய அவசியமே இல்லை. ஒரே ஒரு சுருக்கமான வழியில் கண்டுபிடித்து விடலாம். எப்படியென்றால் "இந்து மத" ஐதீகப்படி புராண சாஸ்திர நிச்சயப்படி, எந்த எந்த ஸ்தலங்கள் புண்ணிய க்ஷேத்திரங்களோ, அதாவது கண்ணால் பார்க்க முக்தி, காதால் கேட்க்க முக்தி, காலால் மிதிக்க முக்தி, நெஞ்சால் நினைக்க முக்தி, அதுமாத்திரமல்லாமல் எந்த எந்த க்ஷேத்திரங்களை கண்டவரைக் கண்டால் முக்தி, கேட்டவரைக்கேட்டால், முக்தி நினைத்தவரை நினைத்தால், முக்தி மிதித்தவரை மிதித்தால், முக்தி என்று இருக்கின்றனவோ அந்தந்த க்ஷேத்திரங்களையெல்லாம் குறித்து பட்டியல் போட்டோமேயானால் உடனே விபசாரத்தடுப்பு சட்டம் அமுலுக்கு வரவேண்டிய ஊர்கள் இவ்வளவுதான் என்று கண்டுபிடித்துவிடலாம். அந்த முறையில்தான் இப்போது மதுரையும், சீரங்கமும், ஷை சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்படவேண்டிய புண்ணிய க்ஷேத்திரங்களாகிவிட்டது.

ஆனால் இப்போது நாம் வெகு அவசரமாக ஒரு புண்ணிய க்ஷேத்திரத்திற்கு, அச்சட்டம் அமுலுக்கு கொண்டுவரவேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டியவர்களாய் இருக்கின்றோம். அது எது என்றால், அது தான் மகா புண்ணிய க்ஷேத்திரமாகவும், 12 வருஷத்திற்கு ஒருமுறை மகாமகா புண்ணிய க்ஷேத்திரமாகவும் விளங்கப்போகும் நமது மகாமக க்ஷேத்திரமாகிய கும்பகோணமேயாகும்.

மார்ச்சு மாதத்தில் நடைபெறப்போவதாய்ச் சொல்லப்படும் மகாமக விசேஷம் என்பதற்கு தமிழ் நாட்டில் ஆஸ்பத்திரியில் கிடக்கும் விபசாரிகள் முதல்கொண்டு,கைகால்கள் முடக்கமேற்பட்டு நீட்டவும், குருக்கவும் முடியாமல் அவஸ்தைப்படும் விபசாரிகள் கூட கால்களுக்கும், கைகளுக்கும் தப்பைகள் வைத்துக்கட்டி நிமிர்த்துக்கொண்டு க்ஷேத்திர யாத்திரை போய்க்கொண்டிருக்கின்றார்கள். எதற்காக என்கின்ற சந்தேகம் சில தோழர்களுக்கு தோன்றலாம். எதற்காக? தாங்கள் இதுவரை செய்த பாவத்தை அந்தக்கிணற்றிலுள்ளமண்ணை, சேற்றையெடுத்து தடவிக்கொண்டால் சகல பாவமும் தீர்ந்து விடுமே என்கின்ற நம்பிக்கைக்காகவா என்றால் அல்லவே அல்ல. இந்த "புண்ணிய காலத்தில்" கும்பகோணக் குருக்கள் பார்ப்பனரும், காப்பி கிளப்பு, டிராமா, சினிமாக்கதை காலக்ஷேபக்கம்பெனி, மற்றும் சுதேசி வியாபாரி முதலியவர்களும் சம்பாதிக்கும் புண்ணியம் போல், தாங்களும் கடை வைத்துப் புண்ணியம் (பணம்) சம்பாதிக்கலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே யாத்திரை புறப்படுகிறார்கள். அந்த ஊரில் ஏற்கனவே ஒரு கூட்டம் உண்டு. சாரித்திரகாலம்தொட்டு பேர்பெற்ற கும்பகோண அய்யர்களைக்காப்பாற்றும் விபசாரிகளும், கஞ்சிக்கில்லாத காரணத்தால், உற்சவ காலத்தில் மட்டும் தற்கால சாந்தியாய் விபசாரத்தை மேற்கொள்ளுகின்றவர்களும் சிலர் உண்டு. போதாக்குறைக்கு வெளி ஊர்களிலிருந்தும் பல கூட்டங்கள் புறப்பட்டு இருக்கின்றன.

ஆகவே அந்த "புண்ணியோதய" காலத்தில் கும்பகோணம் முழுவதும் என்ன காரியத்தில் ஈடுபட்டிருக்கும் என்பதை மனக்கண்ணால் உருவகப்படுத்திப் பார்த்தால் விஷயம் விளங்காமல்போகாது. விபசாரத்தடுப்பு மசோதா என்பது உண்மையாகவே விபசாரத்தைத்தடுப்பதற்கு ஏற்பட்டது என்று இருந்தால் அது கும்பகோண க்ஷேத்திரத்தின் மகாபுண்ணியோதய காலமாகிய மகா மக காலத்தில் அல்லாமல் வேறு எதற்கு அவசியமானது என்பது நமக்கு விளங்கவில்லை ஆகையால் "காருண்ய" சர்க்கார் இந்த விபசாரிகளிடம் காருண்யம் வைப்பதை சிறிது நாளைக்கு ஒத்திப்போட்டு விட்டு,மகாமகத்துக்குவரும் குட்டிச்சுவர்களான ஆண்களிடம் காருண்யம் வைத்து உடனே டெம்பர் வாரியாகவாவது கும்பகோணத்திற்கு விபசாரத் தடுப்பு சட்டத்தை அமுலுக்குக்கொண்டுவர விரும்புகின்றோம்.

---

### புதியம் புத்தூர். சுயமரியாதை சமதர்மச் சங்கம்.

ஷை சங்கத்தின் கூட்டம் 1-2-33ந் தேதி தோழர் சி. சு. கருப்பசாமி முதலியார் கடையில் தோழர் மு. சி. ஸ்த்தேவானநாடார் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

இவ்வூரில் ஆடம்பர செலவின்றி சிக்கனமுறையில் திருமணம் நடத்திய சி. ச. சுப்பையா நாடாரைப்பாராட்டியும், ஈரோட்டில் சென்ற 28, 29-12-32ல்-நடைபெற்ற வேலைத்திட்டக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களை இக்கூட்டம் ஆதரிக்கிறதென்றும் தீர்மானிக்கப்பட்டதென சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

குடி அரசு.

ஈரோடு 1933 பிப்ரவரி மீ 12-உ

## மகாமகம்.

—:0:—

மகாமகம் அல்லது மாமாங்கம் என்பதாக ஒரு பெரிய திருவிழா அடுத்த மாதம் (மார்ச்சு மாதம்) 10 தேதியில் கும்பகோணத்தில் நடத்த ஏற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றது. சுமார் ஒரு லட்சம் ஜனங்களுக்கு மேலாகவே வந்து கூடுவார்கள் என்று கணக்கிடப்பட்டு, ரயில்வேக்காரர்கள் பல பிளாட்டுப்பாரங்களையும், கொட்டகைகளையும் போடுகிறார்கள். அதற்குத் தகுந்தபடி கூட்டங்களை வரவழைக்க அநேகவித சித்திரப்படங்களை அச்சடித்து ரயில்வே ஸ்டேஷன்களின் மேடைகளில் எல்லாம் கட்டித் தொங்கவிட்டும், பத்திரிகைகளுக்குப் பணங் கொடுத்துப் பிரசுரிக்கும்படி செய்தும், மற்றும் பல வழிகளிலும் விளம்பரம் செய்கிறார்கள்.

சாதாரணமாகக் கும்பகோணமானது ஒரு அழகான பட்டணம் என்றோ, சுகாதார வசதியான பட்டணமென்றோ, வேறு ஏதாவது ஒரு வழியில் மக்கள் அறிவுக்கோ, தொழிலுக்கோ, பயன்படத் தகுந்த விசேஷம் பொருந்திய பட்டணமென்றோ யாரும் சொல்லிவிட முடியாது. அது ஒரு புராதனமான பட்டணம் என்பதோடு, நாளுக்குநாள் க்ஷீணதிசை அடைந்துவரும் தோற்றமுடைய பழங்கால முறைக்கட்டடங்களையும் உடைய ஊராகும். அதில் வசிக்கும் மக்களோ பெரும்பாலோர் பார்ப்பனர்களும் "மேல் ஜாதி" மிராசுதாரர்களுமாகும்.

கும்பகோணப் பார்ப்பனர்கள் என்றால் மிக தந்திர சாலிகள் எனபார்கள். கும்பகோணம் மாத்திரமல்ல தஞ்சாவூர் ஜில்லா முழுவதுமே உள்ள பார்ப்பனர்கள் பழைய ராஜாவின் தர்மத்தினாலும், மற்றும் தஞ்சை ஜில்லாவிலேயே ஏற்பட்டிருந்த இரண்டு முதல்தர காலேஜ்ஜுகளும் ஏற்பட்டும், கல்வியும் சுலபமாய் இருக்கும் இடத்திலேயே கிடைக்கக் கூடிய நிலைமை இருந்ததால் படித்துப்பட்டம் பெறவும், அதற்கேற்ற உத்தியோகங்கள் பெறவும் சௌகரியம் ஏற்பட்டு இந்த மாகாணத்தில் அவர்களே முக்கியமானவர்களாய் இருந்துவந்திருக்கிறார்கள்.

சுமார் 25 வருஷங்களுக்குமுன் தமிழ் நாடு மாத்திரமல்ல சென்னை மாகாணமுழுவதிலும்தஞ்சை ஜில்லா பார்ப்பனர்களே திவான்களாகவும், பிரபல வக்கீல்களாகவும், முன்சீப், ஜட்ஜி, டிப்டி கலெக்டர் போலீஸ் இன்ஸ்பெக்டர், சூப்பிரண்டுகளாகவும் மற்றும் பல பெரிய பதவி உடையவர்களாகவும் ஆக நேர்ந்து பிரபலமாகிவிட்டார்கள். இந்தக்காரணங்களால் கும்பகோண பார்ப்பனர்களுக்கு அதிகமான விளம்பரம் ஏற்பட வசதியாகிவிட்டது. அங்குள்ள மிராசுதாரர்களும், ஏறக்குறைய பார்ப்பனர்களை காப்பியடித்து தங்களையும் மேல் ஜாதிக்காரர்கள் என்று விளம்பரப்படுத்திக்கொள்வதோடு நின்றுவிட்டார்களே தவிர, கல்வியில் அவர்களுடன் போட்டி போடவோ, உத்தியோகம் பெறவோ, முடியாதபடி பார்ப்பனர்கள் செய்து வந்த சூழ்ச்சியை வென்று முன்னேற முடியவில்லை. ஆதலால் பணம் சேர்ப்பதிலும், பூமியை பெருக்குவதிலும் மாத்திரம் கவலைகொண்டு ஆள் ஒன்றுக்கு 1000 வேலி 2000 வேலி என்பதாக நிலத்தை பெருக்கிக்கொண்டார்கள். இரண்டு கூட்டமும் சிறிதாவது சரீரத்தினால் உழைக்காமல், ஏழைகள், உழைப்பாளிகள் ஆகியவர்களின் பாட்டினாலேயே வாழ்ந்து வருகிறார்கள். இதைத்தவிர மற்றபடி அந்த ஜில்லாவுக்கும், கும்பகோணத்துக்கும் வேறு உண்மையான யோக்கியதை ஒன்றும் கிடையாது.

ஆனால் மற்றொரு யோக்கியதையும் உண்டு, அது மேற் சொன்னவைகளைவிட மிகவும் மோசமான யோக்கியதையேயாகும். அதென்னவென்றால் தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு விசேஷ ஸ்தலங்களாகும். பாடல் பெற்ற ஸ்தலங்களாகவும், பூலோக வைகுண்டமாகவும், பூலோக சுவர்க்கமாகவும், மற்றும் இந்தியாவில் உள்ள முக்கிய புண்ணிய க்ஷேத்திரங்கள், புண்ணிய தீர்த்தங்கள், புண்ணிய மூர்த்தங்கள் என்பவைகள் எல்லாம் தஞ்சை ஜில்லாவிலேயே ஒவ்வொரு கிராமத்தில் ஒவ்வொன்று பிரதிபலிப்பதாக கதைகளும், புராணங்களும் கர்ன பரம்பரை விசேஷங்களும் உண்டு. தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள் படித்துவிட்டு வெளியிடங்களுக்கு சென்று ஆங்காங்குள்ள செல்வங்களை கொள்ளைகொண்டு போய் சேர்ப்பது ஒன்று, கிராமங்கள் தோறும் புண்ணிய க்ஷேத்திரங்களும், பாடல்பெற்ற க்ஷேத்திரங்களுமாய் இருப்பதால் மற்றவூர்களில்இருக்கும்மூடர்கள் எல்லாம் பாடுபட்டுத்தேடிய பணங்களை மூட்டை கட்டிக்கொண்டுபோய் அந்தஜில்லாவில் அழுதுவிட்டு வரும் மடத்தனம்இரண்டு, ஆகிய இவைகளால் மாத்திரமல்லாமல், மைசூர், குடகு தேசத்தில் இருந்து வரும் காவேரியானது சேலம் கோயமுத்தூர் ஜில்லா வழியாக வந்தாலும் சேலம் ஜில்லாகாரர்களுக்கு குடிப்பதற்குக்கூட மார்க்கமில்லாமல் செய்துவிட்டும், கோயமுத்தூர் ஜில்லாக்காரருக்கு ஒரு செண்டு பூமிகூட பயிராவதற்கு உதவாமல்படி ஏமாற்றிவிட்டு எல்லா தண்ணீரும் நேரே தஞ்சை ஜில்லா சென்று ஜனங்கள் வெளிக்கு போவதற்குக் கூட இடமில்லாமல் எல்லா நிலமும் நஞ்சை பயிராகும்படியும் செய்து கொண்ட சூட்சியால் ஏற்பட்ட லாபம்மூன்று இந்தப்படியாக "இயற்கை" வளம் பெற்ற தஞ்சை ஜில்லாவுக்கு மகாமக விசேஷம் என்னும் ஒரு புரட்டு யோகமும் சேர்வதில் அதிசயமொன்றுமில்லை. ஆனால் இப்போது நாம் இதை ஏன் எடுத்துக்காட்ட வருகிறோம் என்றால், நமது மக்கள் இத்தனை காலம் தான் மூடர்களாய், மடையர்களாய், கடையர்களாய் இருந்து இவ்விதப் புரட்டுகளுக்கும், சூட்சிகளுக்கும் ஆளாகி, நஷ்டமும், கஷ்டமும், இழிவும், ஏமாற்றமும் அடைந்து வந்தோம் என்றாலும் இனியும் பாரம்பரியமாய் தலைமுறை தலைமுறையாய் அடைய வேண்டுமா என்பதை ஞாபகப் படுத்தவே இதை எழுதுகிறோம்.

### மகாமகம்.

தோழர்களே! மகாமகம் என்றால் என்ன? என்பதை சற்று விசாரித்துப் பாருங்கள். இதை அறிவதற்காக நாம் ஆவல் பட்டு தேடினோம், கும்பகோண ஸ்தல புராணம என்பதில் இருப்பதாக அறிந்தோம், அதை வரவழைத்துப் பார்த்தோம். அதில் உள்ளதை வெளியிடுகின்றோம்.

"கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவேரி, சிந்து, கோதாவரி, சரயு, தாமரபரணி ஆகிய ஒன்பது நதிகளும் ஒன்பது கன்னிகைகளாக வெளி வந்து, வெள்ளியங்கிரிக்குச் சென்றுபரமசிவனை அடைந்து, "உலகத்தில் உள்ள மக்கள் எல்லோரும் எவ்வளவோ கொடியதாகிய பாவங்களைச் செய்துவிட்டு எங்களிடத்தில் வந்து ஸ்நானம் செய்து அவர்களது பாவங்களை எங்களுக்கு கொடுத்து தீர்த்துக் கொண்டு போய் விடுகிறார்கள் அந்தப் பாவங்களை யெல்லாம் பெற்றுக் கொண்ட நாங்கள் எப்படி அவைகளை போக்கிக் கொள்ளுவது" என்று கேட்டார்கள். அதற்கு பரமசிவனார் "கும்பகோணத்திலே,தென்கிழக்கிலே ஒரு தீர்த்தம், உண்டு. 12 வருஷத்துக்கு ஒரு முறை மாசி மாதம் மகாமக நாளன்று அதில் குளிப்பீர்களானால் உங்கள் பாவங்கள் தொலைந்து போகும்" என்று சொன்னார். அதற்கு 9 கன்னிகைகளும் "கும்பகோணம் எங்கே இருக்கின்றது" என்றுகேட்டார்கள். அதற்குபரமசிவனார் அந்த 9 கன்னிகைகளையும் பார்த்து "நீங்கள் காசிக்குப் போயிருங்கள், அங்கிருந்து நான் விஸ்வேஸ்வரன் என்னும் பெயருடன் உங்களை கும்பகோணத்திற்கு அழைத்துப்போகிறேன்" என்றுசொன்னார் அந்தப்படியே கன்னிகைகள் காசிக்குப் போயிருந்தார்கள். பரமசிவனார் அவர்களை காசியிலிருந்து கும்பகோணத்துக்கு அழைத்துச் சென்று மகாமக குளத்தைக் காட்டி குளிக்க வைத்தார். பிறகு சிவபெருமானும் அந்த கன்னிகைகளும் கும்பகோணத்திலேயே கோவில் கொண்டு விட்டார்கள்." ஆதலால் இதில் அந்த காலத்தில் குளித்தவர்களுக்கு சர்வபாவமும் தொலைந்து சர்வ மங்களமும் உண்டாகும்" என்று கண்டிருக்கின்றது.

தோழர்களே! இதுதான் கும்பகோணஸ்தலமகத்துவமும், தீர்த்த மகத்துவமும், கோவில் மகத்துவமும் ஆகும். இதற்கு அப்புறம் அந்தக் குளத்தில் எப்படிக் குளிப்பது, அதற்காக பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனப் பெண்களுக்கும் எப்படி, எவ்வளவு பணம் கொடுக்கவேண்டியது என்கின்ற விஷயங்களும் எந்தெந்த இடத்தில் குளிப்பது, எந்தெந்த சாமியைக் எப்படி எப்படி கும்பிடுவது என்கின்ற விஷயமும் இருக்கின்றது.

இந்தக்கதையை ஆதாரமாக வைத்த இந்தமகாமகஉற்சவத்திற்காக எவ்வளவு ஆர்பாட்டங்கள், எவ்வளவு விளம்பரங்கள், எவ்வளவு பணச்செலவுகள், எவ்வளவுகஷ்டங்

கள் என்பதை யோசித்துப்பாருங்கள். இந்துக்கள் மடையர்கள், அஞ்ஞானிகள், மூடர்கள் என்று ஒருவன் சொன்னால் உடனே கோபப்பட்டுக்கொள்ளத்தான் கற்றுக்கொடுக்கப்பட்டு இருக்கின்றோமே அல்லாமல் அறிவைக்கொண்டு பார்க்கின்றோமா?

இந்த கும்பகோணத்துக்கும், அங்குள்ள மாமாங்கக் குளத்திற்கும் உள்ள விசேஷம் போலவே உலகத்தில் உள்ள அநேக சாக்கடைகளிலும், பட்டிக் காடுகளிலும், குப்பைமேடுகளிலும் உள்ள குழவிக் கல்லுகளுக்கும், நீரோடைகளுக்கும், குளங்களுக்கும், குட்டைகளுக்கு மெல்லாம் புராணங்களும், கதை ஆதாரங்களும், ஐதிகங்களும் இருந்து வருகின்றன. பொதுவாக இது போன்ற எந்தக்காரியங்களுக்கும விசேஷம் என்பதெல்லாம் இரண்டே இரண்டு வாக்கியங்களில் தான் அடங்கி இருக்கின்றன.

அதாவது,

1. சர்வ பாபங்களும் நிவர்த்தியாகி விடும்.
2. வேண்டியதெல்லாம் அடையலாம்.

என்கின்றவைகளே யாகும்.

இந்த இரண்டு காரியமும் யோக்கியமான காரியமாயிருக்குமா? என்பதையோசித்துப்பாருங்கள்.

மனிதன் செய்கின்ற பாவமெல்லாம் இந்த மாதிரியான காரியங்களால் தீர்ந்து போவதாயிருந்தால், உலகத்தில் எந்த மனிதனாவது பாப காரியங்களைச் செய்யத் தவருவானா? தயங்குவானா? என்றுயோசித்துப்பாருங்கள்.

மனிதனுக்குவேண்டிய-அவன் ஆசைப்படும் படியான காரியங்கள் எல்லாம் இந்த மாதிரியான சிறுகாரியங்களால் கை கூடிவிடுவதாய் இருந்தால் மனிதனுடைய முயற்சி-நடத்தை-ஒழுக்கம் என்பவைகளுக்கெல்லாம அவசியமும், நிபந்தனையும், வரையரையும் எதற்காகவேண்டும என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

பிறகு, பாவமுள்ள மனிதர்கள் நதிகளில் ஸ்நானம் செய்ததால் நதிகளுக்கு அந்தப்பாவங்கள் ஒட்டிக்கொண்டது என்பதில் ஏதாவது அறிவோ, உண்மையோ இருக்க முடியுமா? அந்த நதிகள் அந்தப் பாவத்தை தொலைக்க மற்றொரு தீர்த்தத்தில் போய் குளிப்பது என்று மகாமக தீர்த்தத்துக்கு வந்து குளிப்பதானால் இதில் ஏதாவது புத்தி இருக்கின்றதா? நாணயம் இருக்கின்றதா? என்று யோசித்துப்பாருங்கள். இத்தனை பாவங்களையும் ஏற்றுக்கொண்ட மகாமக தெப்பக்குளம் அதன் பாவத்தைத்தீர்க்க எந்த உருவெடுத்து எந்த குளத்தில் போய் குளிப்பது என்பதையும், பிறகு அந்த க்குளம் வேறு எந்தக்குளத்துக்குப்போய் பாவத்தைத்தீர்த்துக்கொள்ளும் என்பதையும் யோசித்தால் கடுகளவு அறிவுள்ளவனாவது இதை ஏற்க முடியுமா என்று பாருங்கள். இதையெல்லாம் கவனித்தால் மதத்தின் பேரால், பாபபுண்ணியத்தின்பேரால், கடவுள் பேரால், தீர்த்தம் ஸ்தலம் மூர்த்தி என்னும் பெயர்களால் மக்கள் எவ்வளவு தூரம் ஏய்க்கப்பட்டு, கடையர்கள், மடையர்கள் ஆக்கப்படுகின்றார்கள் என்பதையும் சிந்தித்துப்பாருங்கள்.

மற்றும் அந்த புராணத்திலேயே இந்த மகாமகக்குளத்துக்குள் வடக்கு பாகத்தில் 7 தீர்த்தங்கள் இருப்பதாகவும், கிழக்கு பாகத்தில் 4 தீர்த்தங்கள் இருப்பதாகவும் நடுமத்தியில் 660000000 அருபத்தி ஆறு கோடி தீர்த்தம் இருப்பதாகவும் இந்த மகாமக குளத்தில் முழுகினால் இத்தனை தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்த புண்ணியம் கிடைக்குமென்றும் எழுதி, அந்தப்படி ஒரு சித்திரமும் வரையப்பட்டிருக்கின்றது. இது எவ்வளவு பரிகசிக்கத்தக்க விஷயம் என்று பாருங்கள். இதை எழுதினவன் எவ்வளவு அயோக்கியன் அல்லது எவ்வளவு மூடன் என்பதல்ல இப்போதய நமது கேள்வி. மற்றென்னவென்றால் இதைப்படித்துப்பார்த்து இதன்படிநடப்பார்கள் என்று நம்பிய மக்களை இவன் எவ்வளவு முட்டாளாகவும், அடிவண்டலாகவும் கருதி இருக்கவேண்டும் என்பதுதான் நமது கேள்வி யாகும்.

தீர்த்தம் என்றாலும், நதிஎன்றாலும், குளம் என்றாலும் என்ன என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். நதி என்றால் மழைபெய்வதால் ஏற்படும் வெள்ளங்கள் எல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடும ஓடை அல்லது நீர்போக்காகும்.

குளம் என்றால் இந்தமாதிரி ஓடையில் இருந்து வழி வைத்து தண்ணீர் நிறப்புவதோ, அல்லது மழை வெள்ளத்தால் ஊரிலுள்ள அசுத்தங்களையும், கசுமாலங்களையும் அடித்துக்கொண்டுவந்து குளத்தில் விழுந்து தேங்கியிருப்பதேதான். மற்ற குட்டித்தீர்த்தங்களை என்பதும் கிணற்றுக்குநீர் ஊற்றம் போன்ற ஊற்றேயாகும். இந்தத்தண்ணீர்களுக்குள்ளலாம் அந்தந்த இடத்தை அனுசரித்த குணங்களேதான் உண்டு. மற்றபடி அவற்றில் ஒருமனிதன் செய்யும் பாவம் என்பதைப்போக்கவோ, அவன் ஆசைப்பட்டதைக்கொடுக்கவோ ஆன சக்திகள் எப்படி இருக்கக்கூடும் என்பது ஒரு மனிதனுக்கு தெரியாதா என்றுதான்கேட்கின்றோம்.

மாமாங்க குளம் என்பது மேல் கண்டமாதிரியான ஒரு சாதாரண தெப்பக்குளம். மகா மக சமயத்தில் அதில் உள்ள தண்ணீர் அவ்வளவையும் இறைத்து விட்டு வெறும் அடிவண்டலையும், சேற்றையும் மாத்திரம் மீதி வைத்து அதிலும் கந்தகப் பொடியைக் கலக்கி விடுவார்கள். அந்த சேரானது கருப்புக் களிமண் போல் இருக்கும். அந்தக்குளத்தின் விஸ்தீரணமோ சுமார் 500 அடிசதுரம இருக்கலாம். அடிமட்டம் சுமார் 200 அடி சதுரம் இருக்கலாம். இதில் லக்ஷம் பேர்கள் குளிப்பது என்றால் எப்படி சாத்தியமாகும். அந்தக்குளத்தில் இறங்கி அந்த சேற்றில் கொஞ்சம் எடுத்துச் சரீரத்தில் பூசிக்கொள்ள வேண்டியதுதான். பிறகு இந்த அசிங்கியம் போவதற்கு வேறு குளத்தில் குளிக்கவேண்டியதுதான். இதுதான் வழக்கமாம். ஒரு கிறிஸ்தவரோ, ஒரு மகமதியரோ இந்தப்படி செய்தால், அதை நாம் பார்க்க நேர்ந்தால் அப்போது நாம் என்ன என்று சொல்லுவோம்.

மிஸ். மேயோ நமது பழக்க வழக்கங்களைப்பற்றியும், சடங்குகளைப்பற்றியும் தீர்த்தங்களைப்பற்றியும் எழுதியதைப்பார்த்து கோபித்துக்கொண்டோம். ஆனால் இந்த மாதிரி சேற்றில் குளிப்பதால் நாம் செய்த பாவங்கள் எல்லாம் தீர்ந்து விடும் என்று கருதி இருக்கிற முட்டாள் தனமான பேராசைக்காக நாம் வெட்கப் படுவதில்லை. என்றால் பிறகு எந்த விதத்தில் நாம் அறிவாளிகள், யோக்கியர்கள், மனிதத்தன்மையுடையவர்கள் என்று யோசித்துப் பாருங்கள். இந்த மாமாங்கத்தால் எத்தனை லக்ஷ ரூபாய் ரயில்க்காரன் கொள்ளை அடிக்கப் போகிறான்? எத்தனை லக்ஷ ரூபாய் பார்ப்பான் கொள்ளை அடிக்கப் போகிறான் என்பதைசிந்தித்துப்பாருங்கள். இவை ஒரு பக்கம் இருப்பதோடு கூட்ட நெருக்கடியில் உயிர்ச்சேதம் எவ்வளவு, திருட்டு எவ்வளவு, இவை தவர இப்பொழுதே அங்கு-கும்பகோணத்தில்-காலராவும்அம்மையும்வந்து விட்டது. இதற்காககொட்டகை கட்டி அங்கு கட்டிலும் படுக்கையும் போட்டாய்விட்டது. பிளேக்குக்கும் கொட்டகையும் போட்டாகி விட்டது. அதுவும் தான் தன் பாபத்தைத்தீர்த்துக்கொள்ள அங்குவரப் போகின்றது. சுடுகாட்டுக்காக 10 ஏக்கர் நிலம் ஒதுக்கி வைத்து அங்கு சில குளிகளும் தயாராய் முனிசிபாலிட்டியார் வெட்டி வைத்திருக்கிறார்கள்.

கும்பகோணத்துக் கொசுக்களோ அந்த ஊர் பார்ப்பனர்களையும் குச்சிக்காரிகளையும்விட எத்தனையோ பங்கு மோசமானவைகள் என்று சொல்லலாம்- ஏனெனில் இது அவர்களை விட மோசமாக வெளியில் இருந்து வருகின்றவர்களின் இரத்தத்தை உறிஞ்சக்காத்துக் கொண்டு இருக்கின்றது. மாமாங்கத்துக்கு போய் வந்தவனுக்கு வரப் போகின்ற மலேரியா காய்ச்சல் அடுத்த மாமாங்கம் வந்தாலொழிய தீராது. இந்த நிலையில் உள்ளமகாமகம் என்ன புண்ணியத்தைக் கொடுக்கும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

---

## ரஷியாவும், அட்வொகேட் ஜெனராலும்.

ருஷ்ய (பொது உடமை)க் கொள்கைகளைப் பற்றி பேசுவதோ, பிரசாரம் செய்வதோ குற்றமானதென்பதாகப் பல நண்பர்கள் பயந்து அடிக்கடி புத்தி கூறி வருகின்றார்கள். பலர் இதையெடுத்துக் காட்டி பாமர ஜனங்களை மிரட்டி வருகின்றார்கள்.

ஆனால் இவர்களையெல்லாம் பைத்தியக் காரர்களாக்கத் தக்க வண்ணமும், வீண்பூச்சாண்டி காட்டி பயப் படுத்துகின்றவர்களாக் கும்வண்ணமும், சென்னைமாகாண சட்ட நிபுணரும், அட்வொகேட் ஜெனராலும் (சர்க்காருக்கு சட்ட சம்பந்தமான யோசனை சொல்லுபவரும்) ஆன தோழர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் சென்னை ஓரியண்டல் யூனிவர்சிடி சங்கத்தின் ஆண்டு விழாவில் மாணவர்களிடையும் மற்றும்பண்டிதர்களிடையும் பேசும் போது நன்றாய் விளக்கிக்காட்டி இருக்கிறார்.

அதாவது, "ருஷியாவில் ஒரு திட்டம் ஏற்படுத்தி இருக்கிறார்கள், அதில் சில கெடுதல்களிருந்

தாலும் மேலான நன்மைகளும் இருக்கின்றன. ருஷ்யா திட்டம் உலக முழுமைக்குமே நல்ல பாடம் கற்பிக்கக் கூடியதாய் இருக்கின்றது. கைத்தொழில் அபிவிர்த்தி விஷயத்தில் ருஷ்யா இப்போது உலகத்திலேயே தலை சிறந்து விளங்குகின்றது" என்றும்,

"முதலாளிக்கும் தொழிலாளிக்கும் உள்ள சம்பந்தம் தீர்மானிக்கப்பட வேண்டும்" என்றும் பேசி இருக்கிறார். ருஷ்ய திட்டம் என்றால் என்ன? அது எப்படி ஏற்பட்டது? என்பதை யோசித்தால், பொது உடமைப் பிரசாரம் செய்வதோ "மக்களுக்கு அதை எடுத்துக்காட்டுவதோ தப்பு" என்கின்ற விஷமப்பிரசாரம், சோம்பேறிகளின் சுயநலப் பிரசாரம் என்பது யாவருக்கும் வெளியாகி விடும். திருச்சியிலும், புதுச்சேரியிலும், சென்னையிலும் இருந்து வெளியாகும் சில மதப் பிரசாரபத்திரிகைகள் ருஷ்யா என்றால் மிரண்டுமிரண்டு பாராக்கல்லில் முட்டி மண்டையை உடைத்துக்கொள்ளுகின்றன. ஆனால் இன்று அவர்கள் காப்பாற்றப் போவதாய் வேஷமிடும் மதங்களுக்கு ஆதாரபீடமாக இருக்கும் மேல் நாடுகளிலும் மற்றும் பல நாடுகளிலும் இருக்கும் நிலைமைகளைப் பார்ப்பார்களேயானால் இந்த பகல் வேஷங்கள் பரிகசிக்கத்தக்கவேஷம் என்பதை உணர்ந்து வெட்கப்படுவார்கள். அதுமாத்திரமல்லாமல் அந்தந்த மதங்களின் கட்டுப்பட்ட வாலிபர்களும் இவர்களை முன்னேவிட்டுப்பின்னே பரிகசிப்பார்கள், ஆதலால் பொதுவுடைமை, சமதர்மம் என்கின்ற கொள்கைகளுக்கும், வார்த்தைகளுக்கும் விரோதமாக மதப்பிரசாரப்புளுகுக்காரர்களும், சோம்பேறிக்கூட்டங்களும் செய்யும் விஷமப்பிரசாரத்தையும், சூழ்ச்சிப்பிரசாரத்தையும் வயிற்றுப்பிழைப்புப் பிரசாரத்தையும் கண்டு சிறிதும் கவலையோ லட்சியமோ கொள்ளாமல், கொள்கைகளின் தத்துவங்களும், பயன்களும் ஏழை மக்களுக்கும் உழைப்பாளிகளுக்கும் நன்மையா தீமையா என்பதை மாத்திரம் கவனித்து அதன்படி நடக்கவேண்டுகிறோம்.

## குறிப்பு.

சென்னையில் சென்ற 5-2-32ல் நடந்த திவான் பகதூர் சி. என். ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் குமாரரின் திருமண நிகழ்ச்சி அடுத்த வாரம் வரும்.

## பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம்.

### சந்தேக நிவர்த்தி.

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் என்பதாக ஒரு கம்பெனியை பங்கு ஒன்றுக்கு 10 ரூ வீதம் 3000 பங்குகள் கொண்ட 30000 ரூ மூலதனத்துடன் லிமிடெட் கம்பெனியாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு ரிஜிஸ்டர் செய்து துவக்க விழாவும் செய்தாகி விட்டது. அதற்கு இது வரை சுமார் 250 பங்குதாரர்கள் வரை சேர்ந்து இருக்கிறார்கள். இக்கழகத்திற்கு தோழர் அ. ராகவன் அவர்கள் நிரந்தர அதாவது ஆயுள்கால காரியதரிசியாய் இருக்கிறார். கழகத்தின் முக்கிய நோக்கம் பகுத்தறிவு வளர்ச்சியை ஆதாரமாய்க்கொண்ட ஆதாரங்கள், புத்தகங்கள் வெளியிடுவதே யாகும்.

மற்றும் பகுத்தறிவை ஆதாரவாய்க் கொண்ட துண்டு பிரசுரம், பிரசாரம், தொழில், நாடகம், வியாபாரம் முதலியவைகளையும் சௌகரியம் இடம் கொடுக்குமானால் நடத்துவது என்பதுமாகும்.

இந்தப்படியாக ஒரு தனி ஸ்தாபனமாய் அதாவது சுயமரியாதை இயக்கத்துடன் பிணைத்தாய் இல்லாமல் தனித்து நின்று நடைபெறத் தக்கதாய் நடத்தப்படவென்ன அவசியம் என்று வினவலாம். இவ் வினவுக்கு விடை தோழர் அ. ராகவனால் சுமார் 4, 5 மாத காலத்திற்கு முன்னதாகவே குடியரசு பத்திரிகையில் வெளியிடப் பட்டிருக்கின்றது என்றாலும், இப்போதும் சில தோழர்களுக்கு இது விஷயத்தை அறிய ஆவல் இருப்பதாய் காணப்படுகின்றது. ஆதலால் அதனைப் பற்றி இங்கு இரண்டொரு வார்த்தைகள் குறிக்க விரும்புகின்றோம். அதாவது சுயமரியாதை இயக்கமும் அது சம்பந்தமாய் நடைபெறும் பிரசாரமும், வெளியிடப்படும்பிரசுரங்களும், இது சமயம் பலருக்கு அரசியல் சம்பந்த முடையதாகக் காணப்படுகின்றதுடன், அரசியல் அடக்கு முறைக்கு ஆளாக நேரிடுமோ என்றஅச்சமும் ஏற்பட்டிருப்பதாகத்தெரிகிறது. ஆதலால் தவ்வித சந்தேகமும் பயமும் இல்லாமல் இருப்பதற்கு அதாவது பகுத்தறிவு விளக்கம் என்பது யாவருக்கும் பொதுவானதுஎன்பதோடு, மக்களுக்குபகுத்தறிவை ஏற்படுத்த யாவரும் பிரவேசித்துத்தங்களால்கூடியஉதவிசெய்வதற்குத்தகுதியுடையதாயும், அரசாங்கஅதிருப்திக்கு ஆளாகாததாயும் இருக்கக்கூடியதான ஒரு தனிப்பட்ட ஸ்தாபனம் இருக்குமானால் அதுஎன்றும் நிலைத்திருக்கக் கூடும் என்கின்றஎண்ணத்தின்மீது, மற்றும் எந்த ஸ்தாபனமும் சதாகாலமும் பொது ஜனங்களுடைய ஆதரவையும் உதவியையும், தயவையும் எதிர்பார்த்துக்கொண்டே நடத்த ஏற்பாடு செய்வதைவிட சிறிதாவது வியாபார முறையில் அதாவது லாபம் இல்லாவிட்டாலும் அதிகஷ்டமாவது இல்லாமல் அடிக்கடி மற்றவர்களுக்கு தொந்திரவு கொடுக்காமல் நடக்கத்தகுந்த மாதிரியில் இருந்தால்நீடித்து நின்று உழைக்கத் தகுதி உடையதாகும் என்கின்ற எண்ணத்தின்மீதுமே இந்தப்படி பகுத்தறிவு நூற்பதிப்புக் கழக லிமிடெட் கம்பெனி என்பதாக ஒன்று ஏற்படுத்தி நடத்தப்படுகிறது.

ஆகையால் இக்கழகம் அரசியல் சம்மந்தமுடையதாக இருக்குமோ என்றாவது இதில் கலந்தவர்களும் பங்கெடுத்துக் கொள்ளுபவர்களும் எந்தக்காரணத்தாலாவது அரசாங்க அதிருப்திக்கு ஆளாக நேரிடுமோ என்றாவது அல்லது எதிர்பாராத நிலையில் நஷ்டம் வரக்கூடியதானால் அதுசமயம் தங்களுக்கு தாங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் பங்குத் தொகைக்கு மேல் பொறுப்பு ஏற்படுமோ என்றாவது யாரும் கருதவேண்டியதில்லை.

அரசியல் சம்மந்தத்திலிருந்து பூரணமாய் பிரிந்து நிற்பதற்கும், லாப நஷ்டப் பொறுப்பு வரையறுப்பதற்கும் ஆகவே இக்கழகம் ஏற்பாடு செய்யப்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## நாகை சுயமரியாதைசங்கம்.

### மெம்பர்கள் கூட்டம்.

5-2-33ந்தேதி மாலை 6 மணிக்கு சங்கமெம்பர்கள் கூட்டமொன்று சங்கத்தலைவர் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் கூடியது.

தோழர் வி. சாமிநாதன் "சுயமரியாதைக்கீதம்" பாடினார்.

நாகை தாலூகா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு சம்பந்தமாக தோழர்கள். டி. பி. ஆறுமுகம், எ. சிவராமசாமி, (தஞ்சை ஜில்லா ஆதி திராவிடர் மகாஜன சங்கத்தலைவர்) வி. சாமிநாதன், எ. கோவிந்தன், எம். ஆர். பதி, எம். கோவிந்தராஜலு கே. முருகேசன் முதலியவர்கள் பேசினார்கள்.

தோழர்கள் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல், முத்துசாமிவல்லத்தரசு பி. ஏ. பி. எல். எம். எல். சி., சேலம். இராஜமாணிக்கம், எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல்., குஞ்சிதம் பி. ஏ. எல். டி., முதலியவர்களில் ஒருவரை மகாநாட்டின் தலைவராகவும், தோழர்கள் இந்திராணி பாலசுப்பிரமணியம், நீலாவதி. அன்னபூரணி, மரகதவல்லி முதலியவர்களில் ஒருவரை மகாநாட்டில் ஆரம்பவிழாவாற்றுவதற்கும் தோழர்கள் கே. சி. சுப்பிரமணியம் பார் அட் லா டி. கே விஜயராகவலு பி. ஏ. பி. எல்., சூரியமூர்த்தி பி. ஏ. பி. எல், சிவராமசாமி (தஞ்சை ஆதிதிராவிட மகாஜனசங்கத்தலைவர்)டாக்டர்ராதாகிருஷ்ணன் எல். எம். பி., முதலியவர்களில் ஒருவரை வரவேற்புக்கழகத் தலைவராகவும் தேர்ந்தெடுப்பதென்றும் மேலேகுறிப்பிட்ட தோழர்களின் அபிப்பிராயத்தைக்கேட்டு முடிவு செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. டி. பி. ஆறுமுகம், கே. முருகேசன் மகாநாட்டுக் காரியதரிசிகளாகவும் தோழர் ஆர். வி. கோபால் பொக்கிஷதாரராகவும், தோழர்கள். வி. கோவிந்தன், எம். கோவிந்தராஜ் விளம்பர அதிகாரிகளாகவும் தோழர் எம். ஆர். பதி தொண்டர்படை. தலைவராகவும் வசூல் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. ஏற்கனவே தெரிவித்திருந்தபடி மகாநாடு மார்ச்சுமாதம் கடைசி வாரத்தில் நடைபெறும்என்று நாகை சுயமரியாதை சங்கக்காரியதரிசி அறிவிக்கிறார்.

## ஓர் மரணம்.

ஸ்ரீ காமாக்ஷி விலாஸ் வாசகசாலை தலைவராகிய தோழர் ஆர். நாகராஜ ஆச்சாரியார் 8-2-33-காலை 10மணிக்கு அகால மரணம அடைந்தார்.

ஒரு நிருபர்

## வேண்டுகோள்.

முந்திய வாரங்களில் நமது வேண்டுகோளின்படி தெரிவிக்கப்பட்ட சுயமரியாதைக்கிளைச்சங்கங்கள் 84. அதற்குப்பின் வந்த சங்கங்கள் பின்வருமாறு:—

85. திசையான்விளை, 86. நன்னிலம், 87. மூவார், 88. இராஜகோபாலபுரம், 89. தஞ்சை, 90. திண்டுக்கல், 91. சீயாழி.

மற்றுமுள்ள சங்கங்களையும், புதிப்பிக்கப்பட்ட சங்கங்களையும், நிர்வாக சபை அங்கத்தினர்கள் பெயர்களையும் சீக்கிரம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

## காஞ்சீபுரத்தில் சுயமரியாதை முழக்கம்.

### தோழர்களின் சொற்பொழிவுகள்.

1, 2, 3-2-33ல் நடந்த நிகழ்ச்சிகள் சென்னையிலிருந்து தோழர்கள் எம். சிங்காரவேலு பி. ஏ பி. எல். எஸ். வி. லிங்கம், காரைக்குடி ராம சுப்பையா, சு. ப. விசாலாக்ஷி முதலியவர்கள் காரிலும். காரைக்குடி ப. ஜீவானந்தம், பூவாளூர் அ. பொன்னம்பலனூர் முதலியோர் பஸ்ஸிலுமாக 31-1-33 செவ்வாய்மாலை இங்கு வந்து சேர்ந்தார்கள்.

1-2-33 புதன்கிழமைக் கூட்டம்

மாலை 6 மணிக்கு ஆடிசன் பேட்டை ஜவுளிக்கடை சந்நிதியில் பெருந்திரளான கூட்டத்தினிடையே தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களின் தலைமையில் தோழர் ப. ஜீவானந்தம் "காங்கிரசும் பொதுஉடைமையும்" என்பது பற்றியும்; தோழர் சு. ப. விசாலாக்ஷி அவர்கள் "பெண்களும் சுயமரியாதையும்" என்பது பற்றியும், தோழர் அ. பொன்னம்பலனூர் "பார்ப்பனீயம்" என்பது பற்றியும் பொது மக்கள் மனங்கசியுமாறு பேசினார்கள் தலைவர் முடிவுரைக்குப் பின் இரவு 9-30 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

2-2-33 வியாழக்கிழமை கூட்டம் மாலை 6 மணிக்கு சங்கூசாபேட்டை மைதானத்தில் தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் தலைமையிலேயே தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் "இந்தியாவும் ரஷ்யாவும்" என்பதைக் குறித்தும், தோழர் அ. பொன்னம்பலனூர் அவர்கள் சமதர்ம இயக்கத்தின் அவசியத்தைப் பற்றியும், தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள் கராச்சி காங்கிரஸ் திட்டத்தின் சூட்சியைப் பற்றியும் விரிவாகப் பேசினார்கள். தலைவர் முடிவுரையில் காஞ்சீபுரத்திற்கு அடுத்தாற்போல் 8 மைல் தூரத்திலுள்ள மாமண்டூர் என்னும் கிராமத்தில்நிலச் சொந்தக்காரர்களுக்கு (பார்ப்பன அய்யங்கார்கள்) உழும் பயிரிடுவோர்களாகிய விவசாயிகளு (நாயககருக்கும், ஆதிதிராவிடர்களும்) உழும் ஏற்பட்ட வாரத்தகராறுகளினால் விவசாயத்தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்திருப்பதினால் அவர்கள் பசிக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு கூட்டத்தை இரவு 9 மணிக்கு கலைத்தார்.

3-2-33 வெள்ளிக்கிழமை கூட்டம்.

நோட்டீஸில் அறிவித்திருந்தபடி பெரிய காஞ்சீபுரம் பதினாறுகால் மண்டபத்தில் நடக்கவிருந்த கூட்டம் நடைபெறின் தங்கள் அயோக்கியத்தனம் வெளிப்படுமென அஞ்சி முன் (22-1-33ல்) செய்தபடியே பார்ப்பனர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள். அம்மண்டபத்தில் ஒரு கல்லில் செதுக்கப்பட்டிருந்த ஆறுதலை சாமி என்கிற கற்சிலைக்கு அபிஷேகமென பெரிய மேளங்களை அடித்துக் கொண்டிருந்தபடியால், அடுத்தாப்போலுள்ள தேரடி மைதானத்தில் (பெரிய காஞ்சீபுரம்) மாலை 6 மணிக்கு தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் கூட்டம் கூடிற்று. அது சமயம் தோழர் அ. பொன்னம்பலனூர் "மூடப் பழக்க வழக்கம்" என்னும் பொருள் குறித்தும், தோழர் ப. ஜீவானந்தம் "சமதர்ம இயக்கத்தின் முன்னிற்கும் வேலை" என்பது குறித்தும், தோழர் எஸ். வி. லிங்கம் மாமண்டூர் விவசாயத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைப் பற்றியும், காஞ்சீவரவாசிகள் அவர்களுக்கு உணவு அளிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும் விரிவாகப்பேசினார். மேலும் காங்கிரஸ்காரர்களால் கேட்கப்பட்ட 8 கேள்விகளுக்கு எஸ். வி. லிங்கம் அவர்களால் செவ்வனே பதிலிறுக்கப்பட்டு, தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது கலைந்தது. சீக்கிரத்தில் ஜில்லா மகாநாடு கூட்ட பெருமுயற்சியுடன் வேலை செய்யப்பட்டு வருகிறது.

மூன்று நாள் கூட்டங்களுக்கும் விஜயம் செய்திருந்த முக்கியஸ்தர்கள் வருமாறு:— தோழர்கள் வி. கே ஆர். கிருஷ்ணசாமி முதலியார், அண்ணாமலை முதலியார், பொன்னுசாமி முதலியார், நல்லதம்பி முதலியார் (முனிசிபல் கௌன்சிலர்கள்) ஆக்கூர் ஷண்முக முதலியார், (தாலூகா போர்டு மெம்பர், செய்யார்) மேலயல்லூர் கிருஷ்ணசாமி முதலியார் (ஜில்லா போர்டு மெம்பர், வட ஆற்காடு) ஐயங்கார் குளம் லக்ஷ்மண முதலியார், எம். ரங்கசாமி நாயகர் (முனிசிபல் கௌன்சிலர்) பிள்ளையத்காசிம என்கிற பாக்ஷா சாயபு பகதூர் (அனரரி கௌரவ மாஜிஸ்டிரேட்) கே சையத் ஜாபர், சுல்தான பேக, அமருதீன் முதலியவர்களாவர்.

கூட்டத்தை நடத்த பேராதரவு காட்டிய தோழர்கள் மு. ரங்கசாமி நாயகர், ந. சையத் காஸிம், சுல்தான் பேக் முதலியவர்கள் போற்றுதற்குரியராவார்கள். (ஒரு நிருபர்)

---

## வாலிப சகவாச சங்கம், திருச்செங்கோடு.

சங்க கட்டிடத்தில் வாராந்திரக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது; அவ்வமயம உள்ளூர் தோழர்களும் அயலூர் அபிமானிகளும் விஜயம செய்திருந்தனர். தோழர் எஸ். வி. வி. ராகவன் அவர்களின் தலைமையின்கீழ் தோழர்கள் ருத்ரம். சங்கரலிங்கம் முதலாயினோர், பெண் கல்வி மாதர்களின்நிலை, என்பனவாய பொருள்பற்றி மிகவும் உருக்கமாக சுமார் 3மணிநேரம் விளக்கினார்கள். பின்னர் தலைவர் முடிவுரையுடனும், வந்

## சுயமரியாதை திருமணம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணி சுமாருக்கு சென்னை ராணி கம்பெனி பொருளாளர் தோழர் திருவாரூர் என். ராமனுக்கும், வல்லிபுரம் தோழர் கனகாம்புஜம் அம்மாளுக்கும். திருக்கழுக்குன்றம், திரு. ராஜகோபால செட்டியார் சத்திரத்தில் சுயமரியாதை முறையையொட்டித்திருமணம் நிகழ்ந்தது.

மணமக்கள் ஆசனங்களில் அமர்ந்ததும் தோழர் த. ப நித்தியானந்தம் மணமக்களை சபையோருக்கு அறிமுகப்படுத்தி தோழர் புதுக்கோட்டை பி. முத்துசாமிவல்லத்தரசுவைத் தலைமை வகிக்குமாறு பிரேரேபித்தார் அவர் தலைமை வகித்து ஆற்றிய சொற்பெருக்கின் சுருக்கமாவது: —

இம்மணவிழாவின் முறையை ஆதரிப்போரும், ஆதரிக்காதவர்களுங்கூட இங்கே விஜயம் செய்திருக்கக் கூடும் என்று நினைக்கின்றேன். இவர்கள் இம்மண விழா எப்படி நடைபெறுகின்றதெனக் காண வேண்டியே வந்திருப்பார்களென்று நினைக்கின்றேன். இதுகாறும் பல சுயமரியாதைத்திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனும் இன்னும் நம்மவர்கள வெகுவாக இதன் தத்துவத்தை உணர்ந்து கொண்டார்களென்று கூறுதற்கில்லை. இத்தகைய மணங்களால் மணமகனும் மணமகளும் தத்தம் மண ஒப்பந்தத்தைச் சபையோரறியக் கூறிக் கொள்ளுகின்றனர். இத்தகைய மணங்களால் வீண் செலவுகள் குறைகின்றன. ஆர்ப்பாட்டங்கள் கிடையா. பெருஞ் செலவு செய்து மணமக்களுக்குப் பெருங்கடனை வைக்காதிருப்பதே பெற்றோர்களின் கடமையாகும்;

பிறகு, மணமகளும் மணமகனும் தத்தம சம்மதத்தைச் சபையோருக்கு அறிவித்து மணம் புரிந்துகொண்டனர்,

தோழர்கள் குஞ்சிதம் அம்மாள் பி. ஏ., எல். டி., குருசாமி பி. ஏ., பொன்னம்பலம், சுந்தரத்தம்மாள் ஆகியோர் சுயமரியாதைத் திருமணத்தின தத்துவங்களைக் குறித்தும் உயர்வைக்குறித்தும் வெகுவாக விளக்கிப் பேசினார்கள். பின்னர் திருவாரூர் சமதர்ம வாசகசாலையார் மணமக்களை வாழ்த்தி ஒருபத்திரம் வாசித்துக்கொடுத்தனர்.

இத்திருமணத்திற்கு விஜயம் செய்தவர்களில்முக்கியமானவர்கள்:— தோழர்கள் பி. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். குஞ்சிதம் அம்மாள் பி. ஏ., எல். டி எஸ். குருசாமி, பி. ஏ. சீனிவாசன் பி. ஏ. ஜீவானந்தம், நித்தியானந்தம் பொன்னம்பலனூர், அருணகிரி, சுந்தரத்தம்மாள் திருவாரூர் தட்சணாமூர்த்திப் பிள்ளை, ரங்கராஜுலு, எண்கண் பால சுப்பிரமணியம், பெரியசாமி பி. ஏ. பண்டித பா. பக்கிரிசாமி செட்டியார் ராஜகோபால், நாகலிங்கம், டி. பி. பி. சாமி முதலியோர்.

ராவ்பகதூர் டாக்டர் சி. நடேச முதலியார் திருவாரூர் தோழர்கள் டி. ராஜகோபால், டி. எஸ். ராமலிங்கம், மணி ஐயர், ராஜசந்தானம் பி. ஏ. எல். டி. டி. கேசவலு, ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமி, சங்ககிரி துர்க்கம் தோழர் ஏ. மாரிமுத்து பி. ஏ., எல். டி. பட்டுக்கோட்டை தோழர் கே. தியாகராஜ பிள்ளை, உரத்தநாடு தோழர் இ. சுவாமிநாத பிள்ளை பி. ஏ. எல். டி. அம்மையப்பன் தோழர் டி, கே. கணபதி, 'குமரன்' ஆசிரியர் சொ. முருகப்பா, உரத்தநாடு தோழர் 'பொன்னண்ணகளத்தில் வென்றூர், சென்னை தோழர் சி. பி. பாலசுப்பிரமணியம் முதலியோர் வாழ்த்துக் கடிதங்களும் தஞ்சாவூர் தோழர் ருத்ராபதி வாழ்த்துத் தந்தியும் மணமக்களுக்கு அனுப்பியிருந்தனர்.

மணமக்களுக்குப் பல வகை வெள்ளிப்பாத்திரங்களும், நகைகளும் ரொக்கமும் உறவினரும் நண்பர்களும் வழங்கிய பிறகு தலைவர் முடிவுரையுடன் மணவிழா இனிது முடிந்தது.

---

தனோபசாரத்துடனும் கூட்டம் இரவு 9மணிக்கு இனிது கலைவுற்றது. கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானம் நிறைவேறப் பட்டது.

தீர்மானம்.

சுயமரியாதை இயக்கத் தோழர் மாயவரம் சி. நடராஜன் அவர்களது அருமைத் தாயார் சென்ற 1-2-33-ல் காலமானதைக் குறித்து இக் கூட்டம் தங்களது ஆழ்ந்த அனுதாபத்தை தோழர்களான சி. நடராஜன் சி. சுப்பையா பி. ஏ. அவர்களுக்கும் தெரிவித்து, கொள்ளுகிறது" என காரியதரிசி தெரிவிக்கிறார்

---

## திருச்சி தாழ்த்தப்பட்ட கத்தோலிக்கர் கூட்டம்.

திருச்சி பாலக்கரை பருப்புக்காரத் தெரு ஆரோக்கிய மாதாகோவில் முன்னிலையில்கோவைதோழர் ஏ.ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பொதுக் கூட்டம் 5-2-33 ஞாயறன்று மாலை 5மணிக்கு கூடிற்று. அவ்வமயம் தோழர்களான எஸ். லீலாவதி, தி. திரவியம், எஸ். ராஜமாணிக்கம், எஸ். பி. விசாலாட்சி, எஸ். செங்கசாமி, ராமசுப்பிரமணியம், ஆகியோர் கத்தோலிக்க மதத்தில் உள்ள குருட்டு பழக்க வழக்கங்களையும், மூட நம்பிக்கையும், தீண்டாமை விலக்கைப்பற்றியும்பேசினார்கள்.

தலைவர் முடிவுரையில் மக்கள் மனதில்பதியுமாறு பலமேற்கோள்கள் காட்டி பேசினார்கள். கூட்டத்திற்கு 500க்கு மேற்பட்ட ஆண், பெண்கள் வந்திருந்தனர்.

இரவு 9-30மணிக்கு வந்தனம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது. என ஒரு நிருபர் எழுதுகிறார்

## பிராமண விதவை தேவை.

தெலுங்கு பிராமண வகுப்பில் தோன்றிய 25 வயதுடைய புரோகிதத்தொழிலில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 25 வரை சம்பாதித்துக்கொண்டிருக்கிறவரும், புரோகிதத்தொழிலை அடியுடன் விட்டுவிட மனமுடையவரும், ரூ. 400-க்கு நிலம் உடையவரும் இன்னும் மணமாகாத வருமான ஓர் வாலிபருக்கு பெண் தேவை.

மணமகள்:—25 வயதிற்கு மேற்படாதவரும், தெலுங்கு பிராமண வகுப்பில் அல்லது மற்ற பிராமண வகுப்பில் தோன்றிய நற்குணமுடைய விதவைப்பெண் ஒன்றுதேவை, மணம் பூரண சுயமரியாதை முறையில் நடைபெறும்.

கடிதங்கள் ரகசியமாக வைக்கப்பட்டு வேண்டுவன செய்யப்படும்.

விலாசம்:---

ச. ம. சி. பரமசிவம்
காரியதரிசி,
தமிழ்நாடு புரோகித மறுப்புச்சங்கம்,
22 பாளையம்பஜார்
உறையூர், திருச்சி,

## நாட்டறம்பள்ளி. தென்னிந்திய நலஉரிமைச் சங்கம்.

4—2—33ந் தேதி இச்சங்கத்தின் மாதாந்திரக்கூட்டம் சங்க தலைவர் தோழர் ஆர். வெங்கட்டருமன் அவர்கள் தலைமையில் பலிஜவார் பொதுஜன ஊழியர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதுசமயம் மீரத் சதிவழக்கில் அடைந்த தண்டனையை அன்புடன் ஏற்று, பொதுஉடமை தோழர்களுக்கு வழிகாட்டிய நண்பர்களுக்கு இக்கூட்டம் பாராட்டுகிறது.

17-2-33ந் தேதி வெள்ளிக்கிழமை சமபந்தி வனபோஜனம் அருந்தவும், ஒரு பொதுக்கூட்டம் கூடவும், ஏகமனதாய் தீர்மானிக்கப் பட்டது. இதில் சேர விரும்பும் தோழர்கள் சங்கத் தலைவர் அவர்கட்கு 15-ம் தேதிக்குள்தெரிவித்துக்கொள்ளலாம் என ஷை சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

## மூவார் ஆதிதிராவிடர் சங்கம்.

### வருடாந்திரப் பொதுக்கூட்டம்.

ஷை சங்கத்தின் வருடாந்திரப்பொதுக்கூட்டம் சென்ற ஜனவரி மீ 27 ந்தேதி மாலை 7-30-மணிக்கு சங்கக்கட்டிடத்தில் கூடியது. சுமார் 300 க்கு மேற்கண்ட ஆண்களும், பெண்களும் கூடியிருந்தனர்.

சங்க முன்னேற்ற சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிந்தது. என ஷை சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

## மூன்று மணமகன் தேவை.

(1) வேளாள வகுப்பில் 17 வயதினையுடைய மாநிறமுள்ள ஆங்கிலம் 9 வது வகுப்பு பாஸ் செய்த (டாக்டர் மகள்) பெண்ணுக்கு மணமகன் தேவை.

மணமகன்:— 25 வயதிற்குட்பட்டவரும், இந்து மதத்தைச் சேர்ந்தவரும் பி. ஏ. பாஸ் செய்து சம்பாத்திய முடையவராகவும் மணமகன் இருக்க வேண்டும்.

(2) ரெட்டியார் வகுப்பில் 17 வயதினையுடைய மாநிறமுள்ள சாதாரணமாக படிக்கத் தெரிந்த பெண்ணுக்கு மணமகன் தேவை.

மணமகன்:— 25 வயதிற்குட்பட்டவராகவும், இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும் படிப்பு, சம்பாத்திய முடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(3) இசைவேளாளர் வகுப்பைச் சார்ந்த 16 வயதுடைய மாநிறமுள்ள லோயர் கிரேட் பாஸ் செய்து ரூ 20 சம்பளத்தில் உபாத்தியாயர் வேலை பார்த்து வரும் பெண்ணுக்கு மணமகன் தேவை.

மணமகன்:—25 வயதிற் குட்பட்டவராகவும், இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும், ஹையர் கிரேட் பாஸ் செய்து உபாதியாயர் வேலையில் இருக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

கடிதமெழுதுபவர்கள் தங்கள் தங்கள் நிலைமையை விளக்கமாக எழுதுவதுடன் பதிலுக்கு 0—1—3 ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். கடிதங்கள் ரகசியமாக வைத்து வேண்டுவன செய்யப்படும். மணங்கள் பூரண சுயமரியாதை முறையில் நடைபெறும்.

ச. ம. சி. பரமசிவம்,
காரியதரிசி,
தமிழ்நாடு புரோகித மறுப்புச்சங்கம்,
22 பாளையம்பஜார்,
உறையூர், திருச்சி.

## தென்னிந்திய மருத்துவர் சங்கப் பொதுக் கூட்டம்.

3-2-33-மாலை 6மணிக்கு ஷை சங்க நிலையத்தில்ஷை சங்கத்தலைவர்பண்டிட் ஆனந்தம் அவர்கள் அவைத்தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அதுசமயம் இந்திய சட்டசபையில் தோழர் ரங்கய்யரவர்களால் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரிக்கிறதென்ற தீர்மானம் நிறைவேறியதென காரியதரிசி எழுதுகிறார்.

## சென்னை. மூலக்கோத்தளம் ஐக்கிய வாலிப சங்கம்.

ஷை சங்கத்தின் கூட்டம் 5-2-33ந் தேதி தோழர் வாசுதேவபிள்ளை, எம். எல். சி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பின் தோழர்கள் வி. தர்மலிங்கம்பிள்ளை, எம். எல். சி., பி. பொன்னுசாமி உபாத்தியாயர், ஏ. டி. தாஸ், டி. செல்லப்பா, பேசியபின் தலைவர் முடிவுரைவுடன் கூட்டம் கலைந்தது ஒரு நிருபர்.

## ஆதிதிராவிடர்களுக்கும் அவர்களின் அநுதாபிகளுக்கும் வேண்டுகோள்.

இராமநாதபுரம்ஜில்லா திருப்பத்தூர் தாலூகா, திருப்பத்தூரில் நடந்தேறிவந்த ஆதிதிராவிட சங்க கட்டிடம் சீக்கிரையான நிர்மித்தம அதன் சார்பில்நடந்து வந்தஆதிதிராவிட இராப்பாடசாலை தடையுற்றிருப்பதையும், அதனால் ஏழை மாணவ மாணவிகள் கல்வி பயில கஷ்ட படுவதையும் அறிந்திருக்கலாம்.

தற்காலம் இக்கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட்டு வேலையும் நடைபெற்று வருகிறது. ஆனால் இக்கட்டிடம் முடிவு பெற சொற்ப பணக்கஷ்டத்தால் சுணங்குவதாகத் தெரிந்தும், மாணவ மாணவிகளின் கல்வி யபிவிர்த்த சொற்ப காலம் தடைபடுவதாக தெரிந்து வருந்தும் சிறியவர்களுக்கு ஆதரவளித்து அவர்கள் கல்வி அபிவிர்த்தியில் முன்னுரு மாறு செய்விக்க இதனைக் கண்ணுறும் ஆதிதிராவிடர்களும், அவர்களின் அநுதாபிகளும், தலைவர்களும், குலநல அபிமானிகளும் பொதுநல ஊழியர்களும் பொருளுதவி புரிந்து ஆதரிக்கக் கேட்டுக் கொள்ளுகிறோம் என ஷை சங்கத்தார் எழுதுகிறார்.

## கள்ளிக்கோட்டையில் திருமணங்கள்.

4-2-33ல்-கள்ளிக்கோட்டை ஏகாந்தபரம்பில் மருத்துவன் தோழர் ரெங்கசாமி இல்லத்தில் வேளாளர் வகுப்பைச சேர்ந்த 32 வயதுடைய மணமகனுக்கும், கவுண்டர் வகுப்பைச்சேர்ந்த சுமார் 16வயதுடைய மணமகளுக்கும் வீண் ஆடம்பரங்களின்றியும், பொருள் நஷ்டமின்றியும், காலதாமதமின்றியும், 30-நிமிஷத்தில் திருமணம் நடந்தேறியது. திருமணத்திற்கு சுமார் ஆண்களும், பெண்களுமாக சுமார் 300ஜனங்கள் வரையிலும் குழுமியிருந்தனர். இத்திருமணம் மருத்துவகுல சமூகத்தின் ஆதரவினாலும், நன்முயற்சியாலும், நடந்தது. குறிப்பிடத்தக்கதாகும்.

8-2-33ல்-கள்ளிக்கோட்டை கோர்ட்டு ரோடு குண்டூர் சிறுகண்டன் பரம்பில் ராமானுஜலுநாயுடு இல்லத்தில் ரெத்னகிரி அர்ச்சுணராவு குமாரன் நாராயணன் அவர்களுக்கும் சென்னை ராமானுஜலுநாயுடு குமாரத்தி கனலெச்சுமி அம்மாளுக்கும் வீண் பொருள் நஷ்டமின்றியும் காலதாமதமின்றியும் 60நிமிஷத்தில் திருமணம் நடந்தேரியது. திருமணத்திற்கு ஜாதி வித்தியாசமின்றி சுமார் 100-ஜனங்கள் வரையிலும் குழுமியிருந்தனர். ஒரு நிருபர்

## காலண்டர்கள் வரப்பெற்றோம்.

கல்லூரணி பம்பாய் ஷாப் சொந்தக்காரரும், சுயமரியாதை இயக்கத் தோழருமான தோழர் க. அ. புன்னைமுத்து அவர்களால் அனுப்பப் பட்ட 1933 வருடத்திய காலண்டர் வரப்பெற்றோம்.

இக்காலண்டரில் சுயமரியாதைக் கொள்கைகளின்வாக்கியங்கள் அடங்கி இருக்கிறது. இவற்றை வெளியிட்ட தோழர் க. அ. புன்னை முத்து அவர்களைப் பாராட்டுகிறோம்,

விலாசம்;—

க. அ. புன்னைமுத்து
பம்பாய்ஷாப கல்லூரணி

சென்னை சோல்டன் கம்பெனியாரால் அனுப்பப்பட்ட காலண்டர் வரப்பெற்றோம். அக்காலண்டர்மிக அழகாயிருக்கிறது.

விலாசம்:—

சோல்டன் கம்பெனி,
திருவல்லிக்கேணி ஹைரோடு
சென்னை.

## "குடி அரசு" வெளிநாட்டு ஏஜண்டுகள்.

கோலாலம்பூர்:--

சிமிலங்கர் ஸ்டாம்பு கம்பெனி.
மார்க்கட் தெரு.

வி. நைனா முகம்மது அண் கோ.,
7- பிர்க்பீல்ட்ஸ் ரோடு.

எம். எம். அல்லி அண் கோ.,
மார்க்கட் ஸ்டிரீட்.

சிங்கப்பூர்:—

எம். முகம்மது டல் பக்கிர்,
அண் கோ.,
34 கார்த் பிரிட்ஜ் ரோடு.

எஸ். லட்சுமி,
218 ரிவர் வேலி ரோட்.

ஜி. முகமது இப்ராகிம்
134 டேஞ் காங்பகார் ரோடு.

மலாக்கா: —

ஏ. எஸ். கரீம் அண் கோ.,
51 மில் ரோடு.

பினாங்:—

டி. வை. செல்லய்யா,
டெலிபோன் எக்ஸ்சேஞ்,
பர்மா ரோடு.

## "சன்மார்க்கன்" வாசக நேயர்களுக்கு

இடமாறுதலுக்காக எதிர்பார்த்திருந்த அரசாங்கத்தாரானுமதி கிடைத்து விட்டது. இனிநாளிதுவரையும் விட்டுப்போன பிரதிகளுடன் பக்கம் அதிகப்படுத்தி அடுத்ததிங்களிலிருந்து பத்திரிகை தவறாது வெளிவரும்

ஆண்டு சந்தா:—
உள்நாடு ரூ 1—0—0
வெளிநாடு ரூ-1—8—0.
தனிப்பிரதி ரூ-0—2—0.

(ஆசிரியர்)
சுவாமி சிவம்நசம்.
"சன்மார்க்கன்" திண்டுக்கல்

## வட ஆற்காடு ஜில்லா 14-வது கூட்டுறவு பெருங் கழகம்.

வட ஆற்காடு ஜில்லா 14-வது கூட்டுறவு பெருங்கழகம் நாளது 1933ம் வருஷம் மார்ச்சு மாதம் முதல் வாரத்தில் ஆரணியில் நடைபெறும். சென்னை அரசாங்க வளர்ச்சித்துறை அமைச்சர் தோழர் பி. டி. ராஜன் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார். கல்வி மந்திரி தோழர். திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள் விவசாய கைத்தொழில் கண்காக்ஷிகளைத் திறந்து வைப்பார். முதல் மந்திரி தோழர் பொப்லி ராஜா அவர்களும் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. ஆரணி கூட்டுறவு யூனியன் காரியதரிசி தோழர் எஸ். சிங்கார முதலியார் அவர்களை வரவேற்புக்கமிட்டி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். பெருங்கழகத்தில் அக்கிராசனம் வகிப்பவர் பெயரும், நடைபெறும் தேதியும் பின்னால் தெரிவிக்கப்படும் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## சுயமரியாதை இளைஞர் மன்றம்.

ஷை மன்றத்தின் நிர்வாகக்கமிட்டிக் கூட்டம் 24-1-33ந் தேதி நடைபெற்றது. அதில் மேல்நாட்டுச் சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பிய தோழர் எஸ். இராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்கள் சென்னைக்கு வரும்போது ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதென்ற தீர்மானம் நிறைவேறியதென காரியதரிசி எழுதுகிறார்.

### மற்றொரு கூட்டம்.

ஷை மன்றத்தின் கூட்டம் 5-2-33ந் தேதி தோழர் சி. தங்கராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர் பி. எஸ் சம்பந்தம், டி. ராதா கிருஷ்ணன், எஸ். இரங்கநாதன், கே. கிருஷ்ணசாமி, டி. சம்மந்தம், ஆர். கோவிந்தன், எம். எஸ். முத்து, கே. எஸ். நாதன், பி. சந்தரசேகரன் முதலியவர்கள் பேசினார்கள். பின் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## சேலம் சுயமரியாதைச் சங்கம்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் சங்கப்பந்தலில் 5-2-33ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு ஓர் சுயமரியாதைக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் சங்கத்தின் உதவி காரியதரிசியான தோழர் ஆர். எஸ். கந்தசாமி அவர்களின் தலைமையின் கீழ் "மூடநம்பிக்கை" என்னும் விஷயத்தைப்பற்றி தோழர்கள். சிவஞானம், ஜலகண்டபுரம் எஸ். இராமநாதன், ஆர் நடேசன் ஆகியவர்கள் வெகு உற்சாகமாகப் பேசினார்கள். பின்னர் தலைவர் முடிவுரையுடன் தோழர் சித்தையா அவர்களால் வந்தனம் கூறப்பட்டு 9-30 மணிக்கு கலைந்தது என ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

## திருமயம் சுயமரியாதைச் சங்கம்.

ஷை சங்க மாதாந்திரக் கூட்டம் 1-2-33ல் எஸ். வி. சமத்துவ ஹாலில் கூடுவதாயிருந்தது. சில அசந்தர்ப்பங்களை முன்னிட்டு ஷை சங்க மாதாந்திரக்கூட்டம் கூடுவதை நிறுத்தி ஷை சங்க நிர்வாகஸ்தர்கள் கூடினார்கள். பின் கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன. 15-2-33ல் மாதாந்திரக்கூட்டம் தோழர் கே. என். அவர்கள் வீட்டில் கூடுவதாகவும், தீவிரமாக மெம்பர்கள் சேர்க்கவேண்டுமென்றும், சங்கத்திற்கு நிரந்தரமாகக் கட்டடம் அமைக்கவேண்டுமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டு கூட்டம் கலைந்தது என்று உதவிக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## புதுக்குடி முஸ்லிம் ரிபார்மர்ஸ் அஸோஸியேஷன்:--

ஷை அஸோஸியேஷன் சார்பாக மன்னார்குடி தாலூகா போர்டு தலைவர் தோழர் எ. குப்பையா முதலியார் அவர்கட்கு தோழர் கே. கோபால கிருஷ்ணய்யர் தலைமையில் ஒரு உபசார விருந்து நடைபெற்றது. அவ்வைபவத்திற்கு பல பிரபலஸ்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.


# The Rational Books Publishing Society Ltd.

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்.

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

—:0:—

மூலதனம்: ரூ. 30,000.

பங்கு 1க்கு ரூ. 10 வீதம் கொண்ட 3000 பங்குகளாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்.

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி நிறுவிய இக்கழகம் அறிவியல் நூற்கள் பல எழுதியும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூற்களையும் விஞ்ஞான நூற்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுவதுடன் தமிழிலுள்ள அறிவியல் நூற்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கையையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதியைத் தோன்றச்செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்குமுன் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்ளிக்கேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10ல் ரூ. 2½ வீதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் வாய்தா பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு:— விபரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. இராகவன்,

காரியதரிசி, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,
43, கச்சேரி வீதி, ஈரோடு.



# டாக்டர் சிங்காரம் அவர்களின்

## மஹா சந்தனாதித்தைலம்.

(ரிஜிஸ்டர்டு)

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது

கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

கண் எரிச்சல்
கண் சிவப்பு
கண்ணில் நீர்வடிதல்
கண் அரிப்பு
கண் பார்வைக்குறைவு
கண் கூச்சம்
கண்ணில் பீளை சாருதல்
மேக நீர், வெள்ளெழுத்து
ஒருத்தலை நோய்
கை கால் எரிச்சல்
மூலச்சூடு
அஸ்திகாங்கை
வெட்டைச்சூட்டால் உண்டாகும் திரேகக் காந்தல்
காது நோய், காது மந்தம்
மண்டை இடி.

பீனிசம்
தலை மயக்கம்
தலைப் பொடுகு
சொறி சிரங்கு
தலைமயிர் உதிர்தல்
நாள்பட்ட தலை நோய்
முதலிய பல வியாதிகளை ஆச்சரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கும். ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். பத்தியமில்லை.

24 அவுன்ஸ் டின் ரூ. 4-0-0
12 ,, ,, ரூ. 2-2-0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

## "காயக்க கிராமணி ஆரிய வித்தியா சங்கம்." வாணியம்பாடி.

இச்சங்கத்தின் ஆடிட்டர் தோழர் ஆர். வெங்கிடசாமி அவர்களுக்கு சென்ற மாதத்தில் ஓர் பெண் குழந்தை பிறந்தது. சென்ற 2—2—33ல் பிராமணரல்லாத வாலிபர்களால் அப்பெண் குழந்தைக்கு "நூர்ஜஹான்" எனப்பெயர்வழங்கப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிருர்.

## மரண அறிக்கை.

திருச்சி பாலக்கரை தோழர் வி. உ. அற்புதசாமி அவர்களின் அரிய, செல்வப்புதல்வி ஜாண்தாக்கென்கிற ஞானமணி 6-2-33ந் தேதி திங்கட்கிழமை பிற்பகல் மரணமாயினர் என்பதை துக்கத்தோடு தெவித்துக் கொள்ளுகிறேன் என ஒரு நிருபர் எழுதுகிருர்.

## நன்னிலம் சமரச சங்கம்.

ஷை சங்கத்தின் 2-2-33ந் தேதி மாலை எ. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பின் சங்கத்திற்கு நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்தபின் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுருர்.

## 'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. நைஹன்.

வருஷ சந்தா—2—8—0
விலாசம்:—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்.

## சுயமரியாதை தங்கரத்தினத் தெம்மாங்கு.

இது விருதுநகர் 3வது சு. ம. மகாநாட்டின்போது ஈ. வெ. ரா. முன்னிலையில் படிக்கப்பட்டது. சுயமரியாதைக் கொள்கை முழுதும் தழுவிய அரிய பாடல்கள் வாய்ந்தது.

புத்தகம் 1க்கு விலை ரூ. 0-1-0
" 12க்குத் தபாற் செலவுள்பட " 0-12-0
" 100க்கு " " 5-4-0
தனிப்பிரதி வேண்டுவோர் 0-1-6 அணு ஸ்டாம்பு அனுப்புதல்வேண்டும்.

M. R. மத்தரன், கல்வார்பட்டி.
காசிபாளையம் போஸ்டு,
[திண்டுக்கல் வழி]

## திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1933-ஹு சிறுவழக்கு நெ. 1107

நா. பழ. லக்ஷ்மி ஆச்சி—வாதி.

பல்லடம் தாலூகா சித்தம்பலம் புதூரிலிருக்கும் வேலப்பகவுண்டன்பாளையம் சென்னிமலைக்கவுண்டன் மகன் முத்துச்சாமிக் கவுண்டன்—பிரதிவாதி.

ஷை பிரதிவாதிக்குத் தெரிவிப்பதாவது:—

வாதி ஷை பிரதிவாதி வகையரு பேரில் மேடோவர் புரோநோட்டுப்படிக்கு ரூ. 256-1-0க்கு பிராது செய்து 27—2—33 தேதி ஷை வியாஜ்யமானது முடிவான பைசலுக்காக வாய்தா போடப்பட்டிருக்கிறது. அதுபோது பிரதிவாதி ஆஜராகாவிட்டால் னெம்பர் ஒரு கட்சியாக தீர்மானமாகிவிடும்.

திருப்பூர், 5-2-33. } S. கணபதி அய்யர் வக்கீல்.

## "வெடி குண்டு" தனிப்பிரதி விலை அரையணு ஏஜண்டுகளுக்கு

மேல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி கட்டுரைகளும், சமூக சமுதாய அரசியல் செய்திகளுடனும் அச்சமற்ற ஆணித்தரமான அபிப்பிராயங்களையும் கொண்டு கிரவுன் 1-க்கு 2 சைசில் விசித்திர படங்கள் போட்டு 12 பக்கம், ரேப்பருடன் பிரதி ஞாயிறுதோறும் மதுரையிலிருந்து வெளியிடும் "வெடி குண்டு" என்னும் தமிழ் வாரப்பத்திரிக்கைக்கு எல்லா விடங்களிலும் விற்பதற்கு ஏஜண்டுகள் தேவை. தனிப்பிரதி விலை அரையணு. பிரதி ஒன்றுக்கு இரண்டு பைசா கமிஷன் கொடுக்கப்படும்; எத்தனை பிரதிகள் தேவையோ அத்தனை பிரதிகளின் நான்கு வாரத்திய தொகையை முன் பணமாக அனுப்பப்படாத ஏஜண்டுகளை பதிவு செய்து கொள்ளப்படமாட்டா. முன் பணம் வருடசந்தா ரூ இரண்டு. ஆறு மாதத்திற்கு ஒன்றேகால். வெளிநாடு வருஷசந்தா மூன்று.

A. S. ஆனந்தம்
மானேஜிங் எடிட்டர்
காரியாலயம் தெற்கு வாசல்
மதுரை.

## ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை பை- 0-0-6 100-புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினுல் 100-புத்தகம் தபால் சிலவில்லாமல் அனுப்பப்படும்.

மானேஜர்
'குடி அரசு" ஈரோடு.


## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

(1916 ஹு ஸ்தாபிக்கப் பட்டது.)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும், பூட்டவும்கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்த பின் கவர்மென்ட் லைசன்சும், பாடசாலை சர்டிபிகேட்டும். கொடுக்கப் படும். மோட்டார் மெக்கானிக் தமிழ் புத்தகம் 50 படம் 200 பக்கம் விலை ரூ. 2—0—0. விபரத்துக்கு எழுதவும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்சினீரிங் ஒர்க்ஸ் & பாடசாலை,
மயிலாப்பூர் P. O. சென்னை.


## சுயமரியாதை இயக்கத் தோழர்கள்.

தோழர்கள் 1 ஈ. வெ. ராமசாமி, 2 ஊ. பு. அ. சௌந்திரபாண்டியம், 3 ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்யம், 6. ஈ. வெ. ரா நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம் 8 சிவகாமி, சிதம்பரனுர் 9. குருசாமி-குஞ்சிதம், 10. நீலாவதி—ராமசுப்பிரமணியம் 11. பொன்னம்பலம், 12. சிவானந்தம். 13. அருணகிரி சுந்தரி, ஆகியவாகளின் போட்டோ படங்கள் $6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ சைஸ்படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ ரா. $8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ 1-க்கு 1—0—0. மொத்தமாய்வாங்கு கிறவர்களுக்கு 100க்கு 6—4—0 வீதம் கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் $8\frac{1}{2}$ - $6\frac{1}{2}$ சைசில் உள்ள படம் ரூ 1—0—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். விலாசம்:—

பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு,
ஈரோடு


## அமுத ரத்னகாம்.

(சிறந்த தாது புஷ்டி லேகியம்)

ஐம்பொறிகளுக்கும் நல்ல வலுவைக் கொடுத்து, உயிருக்கு சிறந்த சக்தியைப்பெருக்கி, ஆயுளை வளர்க்கும். 40 நாள் சாப்பிட்டபின் உடலின் நிறை அதிகப்படா விட்டால் பணம் வாபஸ் தருகிரும்.

40 நாளுக்கு ரூ. 4. 20 நாளுக்கு ரூ. 2—4—0.

## இன்பமணி.

நபும்சகம், தாது நஷ்டம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகளை நீக்கி, பூரண இன்பசுகம், வாலிபத்தன்மை, திட காத்திரம் ஆகியவைகளை அளிப்பதில் இதற்கிணையானவை வேறொன்றும் கிடையாது.

30 மாத்திரை ரூ. 5—0—0.

## ஜீரணதி.

(ஒப்பற்ற மலச்சிக்கல் நிவாரணி)

உண்ட உணவைச் செரிக்கச் செய்து தினந்தோறும் மலத்தைக்கழிக்கும். மலச்சிக்கலினுல் உண்டாகும் நோய்கள் எதுவாக இருந்தாலும் தவருமல் குணமாக்கும். பசியின்மை, நெஞ்செரிவு, புளியேப்பம், வயிற்றுவலி, குன்மம், வாந்தி, அரோசியம், தூக்கமின்மை, அசதி ஆகிய நோய்களையும் கண்டிப்பாய் நீக்கும். விலை ரூ. 2.

சித்தானந்த வைத்தியசாலையில் செய்யப்பட்டது. சகல வியாதிகளுக்கும் உத்தரவாதமும், குணமுமுள்ள மருந்துகளிருக்கிறது. விபரத்திற்கு எழுதுங்கள். மலாய் நாட்டு வாசிகள் அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும். கியாட்லாக் இனும்.

ஏஜண்ட், அருணகிரி அண் கோ., தபால் பெட்டி 222, நெ. 49 லிங்க செட்டி தெரு, சென்னை.

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

கால் அவர்களது செலவுக்குப்போக மீதியாகப் பாங்கியில் போடும் தொகையில் சிறிது குறைவுபட்டிருக்கலாம். ஆனால் அந்தக் குறைவு அவர்களது நித்திய சுகபோக வாழ்க்கையை மாற்றிவிடவில்லை!

இதே சமயத்தில் அதாவது ஏழை மக்கள் இவ்வாறு பலவகையாலும் பரதவிக்கும் நேரத்தில், கோவில்களிலும், மடங்களிலும் கோடிக்கணக்கான பணம் குவிந்து அவை ஒரு சிலரின் துர்வினியோகங்களுக்கு உதவியாகிறது.

இந்த இடத்தில் ஓர் உண்மை புலனாகிறது. இதைத்தான் எல்லோரும் உணரவேண்டுமென சமதர்மவாதி விரும்புகிறான்—சாதாரணமாக மனிதனுக்கு வயிற்றில் பசியேற்படுவது எதனால்? அவனுக்கு வேண்டிய ஆகாரம் இல்லாது வயிறு காலியாக இருப்பதால் எனவே மனிதன் உணவை உட்கொள்ள விரும்புகிறான். சாதம் அல்லது வேறெதுவாயினும் உணவுப் பொருள் இருக்கும் பாத்திரத்தண்டை சென்று அதனுள்ளிருக்கும் உணவை எடுத்துக் காலியாயிருக்கும் தன் வயிற்றுக்குள் போடுகிறான். உடனே பசி தணிகிறது! இங்கு இவன் செய்ததென்ன இடம்மாற்றுதல் என்பதுதான்! அதாவது பாத்திரத்திலிருந்த உணவை அந்த இடத்தைவிட்டு எடுத்துத் தன் வயிற்றுக்கு மாற்றிக்கொண்டான். உடனே அவனைப்பற்றிய பசி அகன்றுவிட்டது. இது இயற்கை.

வேறுவிதமாகக் கூறினால் பசித்தவன் தன் வயிற்றில் உணவு இல்லையென்றறிந்ததும், அந்த உணவு இருக்கும் இடத்தை நாடிச் சென்று அந்த உணவைத்தன்வயிற்றில் போட்டது அவன் செய்த காரியம்.

இங்கு இவன் பசித்தவன், அவன் போய் எடுத்த பாத்திரத்தில் உணவிருந்தது. அஃதே போன்று இன்று உலகில் பலர் பசித்திருக்கின்றனர். பசியைப்போக்கவல்லது உணவு ஒன்றே. இந்த பசித்தவர்களிடம் அந்த உணவு இல்லை. ஆனால் வேறிடத்தில் அந்த உணவு இல்லையோ? இருக்கிறது! ஆகவே இங்கும் இடம் மாற்றுதல் என்ற கொள்கை கையாளப்படவேண்டியதாகிறது. பசியெடுத்தவன் பாத்திரத்திலிருந்த உணவைத் தன் வயிற்றுக்கு மாற்றியது போல இல்லாதவர்கள் வைத்திருப்பவர்களிடமிருந்து எடுத்து இடம் மாற்றிக்கொள்வதில் என்ன தவறிருக்கிறது?

தெருவில் ஓர் ஏழை நிற்கிறான். அவனைப்பசிபிணி வாட்டிவதைக்கிறது; அவனது வீட்டில் மனைவி மக்கள் பசியால் களைத்து விழுந்து கிடக்கின்றனர் இந்த மனிதன் காலை முதல்தெருத்தெருவாய் கூலி வேலைக்காக அலைந்தும் "தம்பிடி" கூட கிடைக்கவில்லை. இங்கு அவன் வேலை செய்யத் தயாராயிருக்கிறான்; ஆனால் வேலை கிடைக்கவில்லை— இதற்காக இப்பொழுது இம்மனிதனும் அவன் பெண்டுபிள்ளைகளும் பசியால் வருந்திச்சாவதா? இந்த பிரமாண்டமான உலகம் அந்தத்தனி மனிதனுக்கும் அவன் குடும்பத்துக்கும் என்ன நன்மையைச் செய்ததாகும்?

இதே சமயத்தில் அம்மனிதன் எங்கிநிற்கும் தெருவழியே வேறொரு மனிதர் வருகிறார், அவரது வாயில் உயர்ந்த சிகரெட் ஒன்றிருக்கிறது. சட்டைப்பையில் ஏராளமாகப்பணமிருக்கிறது. சமீபத்திலுள்ள ஹோட்டலுக்குச் செல்கிறார். திருப்தியாகச் சாப்பிடுகிறார் அதற்குமேல்பழவகைகள் தின்கிறார். அதன் பின்னர் தாம்பூலம் போடுகிறார், எல்லாவற்றிற்குமாக ஒரு முழு ரூபாய் எடுத்து ஹோட்டல் காரனிடம் கொடுத்து விட்டு குஷாலாய் வெளியில் வருகிறார். இதை அந்த ஏழை பசிப்பிணி மனிதன் பார்க்கிறான்.

அவன் அப்பிரபுவிடம் செல்கிறான்; தனக்குப் பசிக்கிறதென்று கெஞ்சுகிறான்; தன் மனைவி மக்கள் வீட்டில் பட்டினியால் வருந்துவதாய் தெரிவிக்கிறான். பெரிய பிரபு இரக்கங் காட்டவில்லை. போடா போ, தடியா! நீ ஏன் பாடுபட்டுச் சம்பாதிக்கக் கூடாது" என்று கத்துகிறார் இந்த ஏழை "ஐயா! எங்கும் தொழிலே கிடைக்கவில்லை. தாங்கள் ஏதாவது வேலை கொடுங்கள் செய்கிறேன். எனக்கு வேண்டியது, எனக்கும் என் குடும்பத்துக்கும் சோறு தான்" என்கிறான், பிரபு ஏற இறங்கப் பார்க்கிறார். மறு வார்த்தை பேசாமல் நடக்க ஆரம்பிக்கிறார். தொழிலாளி, ஏழை பசிப்பிணி வாய்ப்பட்ட அம்மனிதன் அவரை வழி மறிக்கிறான். "ஐயா! நீர் எப்படியோ பையில் பணம் வைத்திருக்கிறீர், உமக்குப் பசித்தவுடன் ஹோட்டலில் உண்டீர். மேற்கொண்டும் ஏராளமாகச் செலவு செய்தீர். நீரும் மனிதன் தான்; நானும் வேலை செய்யச் சித்தமாயிருக்கிறேன்; வேலைகிடைக்கவில்லை இப்பொழுது பசிப்பிணி கொல்லுகிறது. நானும் மனிதன் தான், எனக்கு வேண்டியது இப்பொழுது ஒரே நேர உணவு அதைப் பெறுவதற்கு நான்கணாக்களாவது வேண்டும், அது என்னிடமில்லை; ஆனால் உம்மிடமிருக்கிறது நீர் 4 அணா கொடுத்தால் அதனால் இப்பொழுது நானும் என் மனைவி மக்களும் பசியாறுவோம், உமது 4 அணா இச்சமயம் எங்கள் உயிரைக் காப்பாற்றும்" என்று கூறுகிறான். "நான் ஏண்டா கொடுக்கிறேன்?" என்று கூறி பிரபு நடக்கிறார். பிரபுவின் சட்டைப் பையிலிருக்கும் ஏராளமான பணத்தில் ஒரு நான்கணாக்கள் தன்னையும் தன் குடும்பத்தையும் பட்டினி மரணத்திலிருந்து காப்பாற்றும் என்பதை நன்கறிந்த அவ்வேழை மனிதன், பிரபு அதைக் கொடுக்க இசையாதது கண்டு, பலவந்தமாகவாவது அந்நான்கணாக்களைப் பெற முயலுவானேல் அது சட்டப்படி வழிப்பறி குற்றமாகிறது.

தேச மக்களின் உரிமைகள் அக்கிரமமாகப் பாதிக்கப்படாதிருப்பதற்காகவே பாதுகாவலும் சட்டங்களுமிருக்கின்றன. அரசாங்கம் அச்சட்டங்களைச் சிருஷ்டித்துக் கையாளுகிறது. இந்தச் சட்டத்தின்படி பிரபுவின் பணத்தில் நான்கணாக்களை இவ்வேழை எடுத்துக் கொண்டது சட்டபடி குற்றமாகிறது. அந்தச் சட்டம், அப்பிரபுவின் பண உரிமையைப் பாதுகாத்து நிற்கிறது. ஆனால் தனது பசியைப் போக்கிக் கொள்ள அம்மனிதனுக்கு உரிமையும் கடமையுமிருக்கிறது! அவன் தனது உரிமையை எவ்வகையிலேனும் அடைய முயலுகையில் இந்த "உரிமைப் பாதுகாப்புச் சட்டம்" அவனது உரிமையைப் பாதுகாத்து, அவன் பசி தணிய உணவளிக்க வேண்டாமோ? மனிதன் தனதுபசியின் கொடுமையால் அடுத்தவனிடமிருந்து எடுத்துக் கொள்வது குற்றமென்று கட்டுப் படுத்தும் ஓர் அரசாங்கம், நியாயமான அவனது இயற்கைப் பசியை போக்கவும் ஓர் வழியைக் காட்ட வேண்டாமோ?

இன்னும் பாருங்கள்! இம்மனிதன் பசியின் கொடுமையால் நான்கணாக்கள் பிரபுவிடமிருந்து பிடுங்கினான். அதற்காக அவன் கைதியாக்கப் பட்டான், சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டான். ஆனால் அந்தச் சிறைச்சாலையிலும் அவனுக்கு சாப்பாடு கிடைக்கிறது.!—ஆகவே வழிப்பறி செய்ததன் மூலம், அப்பணத்தைக் கொண்டோ, அல்லது தண்டிக்கப்பட்டு சிறையிலடைக்கப் பட்டோ, அவனது பசி அகற்றச் சாப்பாடு கிடைக்கிறது! பசியால் கொள்ளையடித்தவனின் நோக்கமென்ன? வயிற்றுக்குச் சோறுவேண்டுமென்பது தானே! அது சிறைச்சாலையிலும் கிடைக்கிறது!

இதில் இன்னுமொரு வேடிக்கையென்ன வெனில்.; "பசிப்பிணியைப் போக்க அவன் வழிப்பறி செய்தான்; அது குற்றமென்று சிறையிலடைக்கப் பட்டான். ஆனால் அவன் எதை (உணவு) நிறை வேற்றிக் கொள்ளும் உத்தேசத்துடன் வழிப்பறி செய்தானோ, அது தவறென தண்டிக்கப் பட்ட இடத்தில் அவனது அதே உத்தேசம் (உணவு) சிறையில் நிறைவேற்றப்படுகிறது. அதாவது வயிற்றுக்குச் சோறு!

எனவே, உண்மையில் பசிப்பிணியால் சாகும் நிலைமைக்கு வரும் மக்களுக்கு இந்நிலையில் இரண்டே வழிகள் தான் அவர்களது கண்களுக்குக் காணப்படுகின்றன. ஒன்று:-இயன்ற வரையில் பாடுபடத் தயாராயிருந்தும் வயிற்றுக்குக் கிடைக்காத வரையில் உணவுப் பொருள் உள்ளவர்களிடம் சென்று கெஞ்சியோ, அல்லது மிஞ்சியோ உணவு பெறுவது. அது தவறென சட்டம் சிறைப் படுத்தினால் பேசாமல் சிறை சென்று இயன்ற வேலையைச் செய்து கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருப்பது. மற்றொரு வழி:—ஏழை, வேலையற்றோர் போதிய உணவுக்கு வழியற்றிருப்போர், இவர்கள் பால் அனுதாபமுள்ளோர் ஆகிய எல்லோரும் ஒன்று சேர்ந்து தங்களிடமிருந்து இயன்ற அளவு வேலை ஏற்றுக் கொண்டு வயிற்றுக்குச் சோறு போடும்படி அரசாங்கத்தை வற்புறுத்துவது அரசாங்கம் இவர்களுக்காக ஏதாவதொரு திட்டம் வகுக்கட்டும்.

இந்தச் செலவை ஏற்க ஓர் அரசாங்கத்திற்கு பண நிலைமை இடந்தரா தென்றிருக்குமானால், அரசாங்கத்தில், மனிதனின் தேவைக்கதிகமான சம்பளம் பெறுவோரின் சம்பளத்தைக் குறைத்து இந்தத் திட்டத்தை நிறை வேற்றி "வேலையற்றோர் விடுதி" ஏற்படுத்தி இவர்களுக்கு உணவளிக்க வேண்டும். அல்லது அவர்களுக்கு எப்படியாவது வேலை கொடுக்க வேண்டும்.

இவ்விரண்டு வழிகளையும்தவிர்த்து "பட்டினியால் எக்கேடு கெட்டாலுஞ் சரி, எங்களுக்குக் கவலையில்லை. சட்டம் ஒன்றே எங்களுக்குப் பிரதானமானது; நீங்கள் அதை மீறினால் தண்டிக்கப்படுவீர்கள்" என்று ஓர் அரசாங்கம் பதில் தருமாயின், "பேசாமல், சட்டத்தை மீறி, உணவுப் பொருள், பணம் முதலியவை உள்ள இடத்தில் சென்று ஏதேனும் ஓர் வகையில் அவற்றைப் பெறுவதும்; சிறையிலடைக்கப் பட்டால்சுகமாகச் சென்று வருவதும்" என்ற முடிவிற்குந் தான் ஏதாவது ஒரு நாளைக்கு அந்த ஏழை வர முடியும். அதை விட்டு விட்டு, இது சட்டம் என்பதற்காக பக்கத்து வீட்டில் அளவுக்கு மீறிய உணவுப் பொருளும் உணவுப் பணமும் குவிந்து கிடக்கையில், பக்கத்து வீட்டில் இந்த மனிதன் பெண்டு பிள்ளைகளுடன் பட்டினி கிடந்து சாவதை அவ்வேழை விரும்பமாட்டானல்லவா?

இதிலிருந்து ஒரு அரசாங்கத்தின் கடமை, அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்களைத் தண்டிப்பது மட்டுமல்ல; அமைதி பங்கத்திற்கு என்ன காரணமோ அவற்றையும் நீக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடமையென்பது நன்குபுலனாகிறதன்றோ?

எனவே வேலையற்றோரும், சீர்திருத்தப் பிரியரும், "எவ்வாற்றானும் சமதர்மத்தை நிலைநாட்ட முயல வேண்டியதாகிறது. சமதர்ம வாதிகள் செய்ய வேண்டிய முதல் கடமை "சமதர்ம"க் கொள்கைகளை இவ்வேழை மக்கள் நேரிய முறையில் அறியும் வண்ணம் தக்க முறையில் பலத்த பிரசாரமும் கிளர்ச்சியும் பண்ண வேண்டியதேயாகும்.

இதனால் நாட்டில் அமைதியின்மையும், சட்ட மீறுதலும் ஏற்பட வேண்டுமென்பது நமது அபிப்பிராயமல்ல; ஆனால்; நாட்டில் எல்லா மக்களிடத்திலும், எல்லாவகையிலும் அமைதி ஏற்படத் தக்க வழியினைக் கண்டு பிடிப்பதும், அவ்வழிக்குச் சட்டம் துணை போகும் வண்ணம் செய்வதுமேயாகும்.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

படி என் போன்றூர் வெகு நயமாகக் கேட்கும் போது, அவர்கள் அக்கள்ள நியாயத்திற்கு இணங்க முடியாமல் பரிதவிப்பதை நான் நேரில் கண்டு அநேக தடவைகளில் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறேன்! பாவ மன்னிப்புப்பெறுவதில் அவர்களுக்கு ஏற்படும் இயற்கை வெறுப்பையும், அச்சமயத்தில் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கும்போது ஏற்படும் லச்சையையும் அவர்களும் என்னிடம் பல தடவைகளில் கூறி அழுதிருக்கிறூர்கள். ரோமச்சபையில் பாதிரியாக இருப்பதிலுள்ள இழிதன்மையை நான் நினைந்து நினைந்து பன்முறை நைந்துருகியுமிருக்கின்றேன். அச்சமயங்களில் நாங்கள் கேட்கும் வினுக்களுக்கு விடை பகராமல் தைரியமாக எதிர்த்து மறுமொழி கூறிய பல மாதர்களை இன்னும் நான் போற்றிப் பாராட்டுகிறேன். பெருந்தன்மையுடைய எந்த ஆண்மகனும், பெருமையுடையவளாகத்தான் பாவிக்கும் எந்த பெண் மகளிடத்திலும் அவ்வாறு வார்த்தையாடுதல் தகாதாதலின், பாவசங்கீர்த்தன காலங்களில் அவர்கள் கூறிய தெய்வ வாக்கு போன்ற சிலஞான மொழிகளுக்காக, அவர்களுடைய பாதார விந்தங்களில் வீழ்ந்தும் மன்னிப்புக் கேட்க வேண்டியவனுக இருக்கிறேன்.

திருச்சபையின் கட்டளைகளை நம்பியதால் நான் இழைத்த சில தகாத காரியங்களுக்காகஎன்னையே நான் கடிந்து கொள்ளுகிறேன்.

"கலியாணத்தை மறுத்த நீ எவ்வாறு இத்தகைய கேள்விகளை ஒரு பெண் மகளிடம் கேட்கத் துணிந்தாய்? அவற்றைக் கேட்கும் போது உனக்கே வெட்கமாகவும் அருவருப்பாகவும் தோற்றவில்லையா? உன்னுடைய சுயமரியாதை யுணர்ச்சி எங்கே போயிற்று? கடவுளிடம் நீ கொண்டுள்ள பயபக்தி என்ன ஆயிற்று? அத்தகைய தகாத வார்த்தைகளை ஒரு ஆண்மகனிடம் தாராளமாகக் கூறும்படி தீ பழக்குவதால், அவளுடைய அழிவையே நீ அதிகரிக்க ஆதாரமாகின்றுயன்றே?" —என்று பல விதமாக உள்ளத்தில் எழும் கேள்விகளுக்கு நான் பதிலளிக்க முடியாமல் தயங்கவேண்டியவனுக இருக்கிறேன்.

ஆனுல், மதத்தலைவர்களாகிய போப்புகளும், வேத சாஸ்திரிகளும் (Theologians) ரோமைச் சபைகளும்—இம்மாதிரியாக,மனதில் எழும் எண்ணங்கள் சாத்தானுடைய தூண்டுதல்களென்பதாக,—என்னை நம்பும்படி தூண்டுகிறூர்கள். என்னுடைய மனசாட்சிக்கும் அறிவுக்கும் விரோதமாகத் தோன்றும்படியான அத்தகைய கேள்விகளை நான் தவருது கேட்பது தான் சாஸ்திர சம்மதமானதென்பதாக அவர்கள் எனக்கு அறிவித்திருக்கிறூர்கள்.

சோதம் குமாரோ (Sodom & Gomorrah) எனும் தீர்த்தத்தில் என்னுடனும், இன்னும்என் போன்ற பாதிரிகளுடனும் அப்பெண்மணிகள் புண்ய ஸ்நானம் செய்தாலொழிய, அவர்களுடைய சித்தம் சுத்தமடையாதென்பதாகவும், பயமும் பாவமும் இழிவுமே அவர்களைச் சேரும் என்பதும் என்னுடைய மேலான திருச்சபை சட்டமாகும். ஆதலின் அதற்கேற்ப பாவமன்னிப்பிற்காக நான் மன்றுட வேண்டியிருக்கின்றது.

பூஸிசம், ரிட்சுவலிஸம் (Puseyism or Ritualism) இவற்றின் பெயரால் நமது மேலான எபிஸ்கோபல் சர்ச்சிலே (Episcopel church) புகுத்தப்பட்டுள்ள பாதிரிகள் காதிலே சொல்ல வேண்டிய பாவசங்கீர்த்தனத்தின் பயனுல், (Auricular confession) கிறிஸ்து உலகத்திற்கே, முக்கியமாக இங்கிலாந்து, ஆஸ்திரேலியா அமெரிக்காவிலுள்ள பிராடஸ்டெண்டு கிறிஸ்துவ உலகத்திற்கே பெருத்த தீங்கு நேரிட்டிருக்கின்றதெனக் கூறலாம்.

இந்தச் செவி மடுப்புப் பாவ சங்கீர்த்தனத்தால் எபிஸ் கோபல் சர்ச்சே அந்த காரத்தில் அழியும் என்பதில் தடையில்லை. போப்புகள் இதற்கு உடனே தக்க பரிகாரம் தேடாதிருப்பின், (Gesuits) சேசு சபையார்களால் புகுத்தப்பட்ட, இந்தக் கொள்ளை நோய கிறிஸ்தவ உலக மக்களனைவரையும் விரைவில் பாழாக்கி விடுமென்பது திண்ணம்.

(தொடரும்)

---


## குஷ்டம்

வேண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4-வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413

Calcutta (k)



Ready for Sale! Ready for Sale!!

## The Crux of the Indian Problem
### By Dr. Paranjpye M. A., D. Sc.

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvenation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God. Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print. Well gotup. Neatly bound.

Price per copy ... ... Rs 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

Kudi Arasu Book Depot, Erode.



இனம்! ஆச்சரியம்!! இனும்!!!

## "காயகல்பம்"

கண்டதுமில்லை. கேட்டதுமில்லை.

24-மணி நேரத்தில் குணமில்லாவிடில் ரூபாய் வாப்பீஸ் செய்கிறோம். வெட்டை ஸ்திரீகளின் சம்பந்தத்தினுல் நேரிடும் வெள்ளைக்கு கை கண்ட மருந்து.

## முழுதும் கவனியுங்கள்.

கிழவர்களைக் குமாரனுக்கும் என்பதற்கு ஏதாவது சந்தேகமுண்டா? இதை உபயோகித்த பிறகு சுகமில்லை என்று சொல்ல மனிதருண்டா? வீசை வீசையாய் சாப்பிட்ட லேகியங்களெல்லாம் இதற்கு இணையாகுமா? (ஸ்திரீகளைக்கண்ட மாத்திரத்தில் வெட்கி தலைகுனியக்கூடிய ஸ்திதியிலுள்ளவர்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? இதை காலை மாலை சாப்பிட்டுக்கொண்டுவர வெள்ளை, தேகமெல்லாம் சதா அனல், கைகால் ஓச்சல், சீதபேதி, ரத்தபேதி, ரத்தமூலம், நீர் எரிச்சல், ஆசனக்கடுப்பு, அதிக உஷ்ணத்தினுல் நித்திரை இல்லாமை, ரத்தக்கொதிப்பு, மூளைக்கொதிப்பு, உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், சொட்டு மூத்திரம், நாசியில் ரத்தம் வருதல், எலும்புருக்கி, அஸ்தி வெட்டை, கை கால் ஓச்சல், மயக்கம், சோம்பல் கண் எரிச்சல், உஷ்ணத்தில் தலை மயிர் உதிருதல், சொரி, கணச்சூடு, சிரங்கு, கெர்ப்ப வெட்டை, மலச்சிக்கல், உஷ்ணத்தினுல் உண்டான வியாதியெல்லாம் போய் தேகத்தை தங்கமயமாக்கும். இந்தியாவில் 100-க்கு 95-பேர் உஷ்ண சரீரமாகவே இருக்கிறூர்கள். தேகத்திலுள்ள உஷ்ணங்களைக் கண்டித்து சப்த நரம்புகளுக்கும் முருக்கேற்றி தேகத்தை தங்கமயமாக்கும்.

40-நாள் மருந்து ரூ. **2-4-0.** 20-நாள் மருந்து ரூ. **1-4.0.**
(மாதிரிக்காக)

வி. பி. சார்ஜ் பிரத்யேகம். உடனே எழுதுங்கள்,

விலாசம்:— ஸ்ரீ தணிகை முருகன் ஆஸ்ரமம்,
8-வது பீட், வேப்பேரி போஸ்ட், மதராஸ்.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 2. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 3. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 4. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 5. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 6. | பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை | 0—6—0 |
| 7. | மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)

விலை ரூ. 1—0—0

"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

---

## எங்கே கிடைக்கும்?

பல மருந்துகளையும் கையாடி பயனடையாமல் இருப்பவர்கள் தக்க மருந்தையறிந்துகொள்ளும் பொருட்டு இதைப்பிரசுரம் செய்திருக்கிறோம்.

எவ்வித வியாதிக்கும் ஏற்றமருந்து பழனி மலையப்பசாமி வைத்தியசாலையில்தான் கிடைக்கும்.

வியாதிவிபரம் எழுதி ஏற்ற மருந்தை அடையுங்கள்! இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி S.I.

---

## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

---

## Read.
## The 'Citizen'

and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

---

## "புரட்சி ஓங்குக!
## பொதுவுடமை
## தோணுக!!"

---

உங்கள்.
கண் [illegible]
கா[illegible]
கவனித்துக் கொள்ளுங்கள்.

### பூவிழல் ! !

கண்ணில் [illegible] வைத் [illegible] இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை [illegible] நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

### செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

---

## பண்டிட் ஆனந்தரின்,

### அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துகொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய், குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு செயற்கை வைத்தியமாகிய நவதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ண அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

# குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றுக்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது மிக சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

## சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

## இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

## இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபே எழுதியது விலை அணா. 0 8—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0

Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

## மநுநீதி மருமம்.

விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

## சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.